Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 25, 2024

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 25, 2024 | ஒளி: 10 கதிர்: 079 | பக்கம்: 10 | நகரப்பதிப்பு★ | FREE



# கனடாவும் எச்சரிக்கை

இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள், பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் குற்றச் செயல்கள், குறிப்பாக அம்பாறை அறுகம்பே பகுதியில் இடம்பெறும் அச்சுறுத்தல்கள் காரணமாகப் பயணிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கனேடிய அரசாங்கம், தங்களுடைய பிரஜைகளுக்குப் பயண ஆலோசனை ஒன்றை விடுத்துள்ளது.

நாடு முழுவதும்

# அதியுச்ச பாதுகாப்பு

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு; மூவர் கைது என்கிறார்



**தவறான செய்திகளுக்கு பொதுமக்கள் பலியாக வேண்டாம் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது**

அம்பாறை அறுகம்பே பகுதியில் இஸ்ரேல் பிரஜைகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், வியாழக்கிழமை (24) மாலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், சந்தேகநபர்களான இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தற்போது சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட்டு தொடர்ச்சி P2



## இஸ்ரேலியர்கள் 22 பேர் வெளியேறினர்

இலங்கைக்கு சுற்றுலா வந்திருந்த இஸ்ரேலிய பிரஜைகள் 22 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வியாழக்கிழமை (24) அதிகாலை புறப்பட்டுள்ளனர்.

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அறுகம்பே பகுதியில் வைத்து இஸ்ரேலியர்கள் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததால், மேலும் இலங்கையில் தங்கியிருப்பது ஆபத்தானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகமும், இஸ்ரேலிய அரசாங்கமும் அறிவித்ததையடுத்து, குறித்த இஸ்ரேலியர்களை பாதுகாப்பாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு அவர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலுக்கு ஒரு நிலையான கால அட்டவணைக்கமைய விமானங்கள் இல்லாததால், அவர்கள் துபாய்க்கு சென்று அங்கிருந்து இஸ்ரேல் செல்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 14 தேர்தல் அல்ல

## “பாராளுமன்றத்தை சுத்தம் செய்யும் சிரமதான நாள்”

நவம்பர் 14ஆம் திகதி நடைபெற போவது ஒரு தேர்தல் அல்ல, சுத்தம் செய்வதற்கான பாரிய சிரமதானமாகும். அதாவது, இலங்கையில் பாராளுமன்றத்தை சுத்தம் செய்வதற்கான சிரமதானம் நடத்தப்படுகின்ற நாளாகும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் அடைமழையில் நனைந்து கொண்டு பொலன்னறுவையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிக்கான கூட்டத்தை நடத்துகிறார்கள். மக்களிடமிருந்து பிரதிபலிக்கின்ற எதிர்பார்ப்பு, நோக்கம் மற்றும் திடசங்கற்பம் நவம்பர் 14ஆம் திகதி தனிச்சிறப்பு வாய்ந்த வெற்றியை பொலன்னறுவையில் இருந்து பெற்றுக் கொடுப்பது வெளிக்காட்டுகிறது என்றார்.

பொலன்னறுவையில், ஒக்டோபர் 23ஆம் திகதியன்று நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார். தொடர்ச்சி P2



## அறுகம்பே சம்பவம் சர்வதேச சதியா?

**இந்த சம்பவம் தொடர்பான தகவல் ஏலவே பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்**



இலங்கையில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பிரசாரத்தின் மூலம் இலங்கையில் சுற்றுலாத்துறையைச் சீர்குலைக்கச் சதி நடக்கிறதா? என்பது குறித்து ஆராய வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணித் தலைமை அலுவலகத்தில் வியாழக்கிழமை (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே டலஸ் தொடர்ச்சி P2

## நாமலிடம் இரண்டு மணிநேரம் விசாரணை

**நாட்டு மக்களுக்கு எங்களைப் பற்றி தவறான ஒரு படம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை பொய்யாக்கவே நான் இன்று வந்தேன்**



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நாமல் ராஜபக்ஷ வியாழக்கிழமை (24) காலை 09.00 மணியளவில், வந்திருந்தார்.

“ஆட்சி மாற்றம் ஏற்படும் போது, முன்னைய அரசாங்கத்தில் இருந்தவர்களை அழைத்து, அவர்களைக் கேள்வி தொடர்ச்சி P2

## முந்திய தகவல் குறித்து என்ன செய்தீர்கள்?

**இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான ஒரு கூட்டத்திற்கு அரசாங்கம் அழைப்பு விடுக்க வேண்டும்**

இலங்கையின் அறுகம்பே பகுதியில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடாத்தப்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து ஒக்டோபர் 07 ஆம் திகதிக்கு முன்னர் தகவல் கிடைத்த போதிலும் தற்போதைய அரசாங்கம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது குறித்து முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர கவலை வெளியிட்டுள்ளார்.

எச்சரிக்கப்பட்ட தாக்குதல்கள் பற்றிய தகவல்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திர அதிகாரிகளுக்கு அரசாங்கம் ஏன் விளக்கமளிக்கவில்லை என்று காஞ்சன தனது எக்ஸ் பக்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.



“தேசியப் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலை ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது, சுற்றுலா வருமானம் நாட்டின் மிக முக்கியமான வருமான ஆதாரங்களில் ஒன்றாகும்” என்று காஞ்சன விஜேசேகர கூறினார்.

அரசாங்கத்திடம் முன்கூட்டியே தகவல் இருந்திருந்தால் மற்றும் தொடர்ச்சி P2

## “வாருங்கள் அஞ்சவேண்டாம்”

எந்தவித அச்சமும் இன்றி இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பிரிவு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையில், சுற்றுலாப் பயணிகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பை வழங்கப் பாதுகாப்பு அமைச்சினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை சுற்றுலா ஊக்குவிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை, அறுகம்பே பகுதியை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாகக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் புதன்கிழமை (23) முற்பகல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## விஸ்தாராவில் குண்டு புரளி

டி.கே.ஜி.கபில

இந்தியாவின் மும்பையிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த விஸ்தாரா விமானத்தில் வெடிகுண்டுகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டு வியாழக்கிழமை (24) பிற்பகல் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மும்பையிலிருந்து UK-131 விஸ்தாரா எயார் லைன்ஸ் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தைப் பிற்பகல் 02.56 மணியளவில் வந்தடைந்துள்ளது.

Airbus A-320 ரக விமானமான இந்த விமானத்தில் 108 பயணிகளும் 08 ஊழியர்களும் இருந்துள்ளனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# அதியுச்ச பாதுகாப்பு

வருவதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட மாட்டாது எனவும் அவ்வாறு செய்வது விசாரணைகளுக்கு இடையூறாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாத தொடக்கத்தில் இஸ்ரேலிய பிரஜைகள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் குறித்து வெளிநாட்டுப் புலனாய்வு சேவைகளிடமிருந்து இலங்கை அதிகாரிகளுக்குப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்திலும் இவ்வாறான தகவல்கள் அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல் உறுதிப்படுத்தப்படும் வரை நாங்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்கவில்லை, ஆனால், தகவல் கிடைத்தவுடன் நாங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தோம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

தவறான செய்திகளுக்குப் பலியாக வேண்டாம் என்று பொதுமக்களை வலியுறுத்திய அவர், நிலைமையை அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு எதிராக எச்சரித்தார்.

பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது என்று வலியுறுத்தினார்.

சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில், இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் உள்ள சபாத் வீடுகளைச் சுற்றி (யூத பிரார்த்தனை கூடங்கள்) சிறப்புப் பாதுகாப்பு ஈடுபடுத்தப்பட்டுள்ளது மற்றும் பொலிஸ் ரோந்துகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் கொழும்பு, அறுகம்பே, எல்ல மற்றும் வெலிகம பிரதேசங்களில் உள்ள சபாத் வீடுகளுக்கு அருகில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தூதரகங்கள் வழங்கிய ஆலோசனைக்கு முன்னதாகவே இந்தப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் அறுகம்பே, எல்ல, வெலிகம, அஹுங்கல்ல ஆகிய பிரதேசங்களில் இம்மாத ஆரம்பத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

# அறுகம்பே சம்பவம் சர்வதேச சதியா?

அழகப்பெரும இவ்வாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டுப் புலனாய்வு சேவைகள் தமது தூதரகங்கள் மூலம் இலங்கையில் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எமக்கு எச்சரித்துள்ளன. இலங்கையில் சுற்றுலாத்துறையை மையமாகக் கொண்ட கிழக்கு, தென், மேற்கு பிராந்தியங்கள் மற்றும் சுற்றுலா புவியியல் பிரதேசங்களில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டுப் புலனாய்வு செய்திகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கத் தூதரகம் மற்றும் ஏனைய தூதரகங்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டதையடுத்து, சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் பாதுகாப்புப் படையினருக்கு அறிவிக்குமாறு இலங்கை பாதுகாப்புப் படையினர் மக்களிடம் கோரிக்கை விடுத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பான தகவல் ஏலவே பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார். இந்த அறிக்கைகளைப் பார்க்கும்போது, எங்களுக்கு நியாயமான சந்தேகங்கள் எழுகின்றன. நாட்டின் பாதுகாப்பு குறித்து அச்சமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டுள்ளன.

அமெரிக்கத் தூதரகத்திற்கு இந்த தகவல் வருவதற்கு முன்பே நமது நாட்டின் பாதுகாப்புப் படையினரும், புலனாய்வுத்துறையினரும் இந்த விடயத்தை அறிந்திருந்தால், இந்த எச்சரிக்கையை ஏன் பகிரங்கப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலிலும் இதேதான் நடந்தது.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் தற்போதைய அரசாங்கம் அதிக அக்கறை காட்ட வேண்டும். நாட்டின் குடிமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், இலங்கையின் சுற்றுலாத்துறையை அழிக்கும் சதி இந்த சம்பவத்தின் பின்னணியில் இருக்கிறதா? என்பதை உறுதி செய்து, இது குறித்து அரசாங்கம் பொறுப்புடன் மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அரச தரப்பில் இருந்து எந்த பொறுப்பான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றே நமக்குத் தோன்றுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் மிக அதிகமான கருத்துக்களை நாட்டுக்கு முன்வைத்தவர் சஜித் பிரேமதாச தான். இதற்காக முன்னின்ற முக்கிய அரசியல்வாதிகளில் இவரும் ஒருவர். ஒரு கட்சியாகவும் கூட்டணி என்ற ரீதியிலும் நாங்கள் இந்த விடயத்தை நாம் மிகவும் பொறுப்புடன் பார்க்கின்றோம். இந்த விடயத்தில் நாங்கள் அரசியல் ஆதாயம் பெற முயற்சிக்கவில்லை. எமது நாட்டில் மூன்று தேர்தல்களில் முக்கிய ஏலப் பொருளாக இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலே விற்கப்பட்டது. இப்போது நான்காவது தேர்தல் நடந்து வருகிறது. நான்காவது தேர்தலிலும் இத்தாக்குதல் சில்லறைப் பொருளாக விற்கப்படுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தைத் தேர்தல் ஏலப் பொருளாக மாற்றாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குமாறு தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் ஐக்கிய மக்கள் கூட்டணியாகக் கோரிக்கை விடுக்கிறோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியல் கருவியாகப் பயன்படுத்தாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதே அரசாங்கம், எதிர்க்கட்சி, கத்தோலிக்க திருச்சபை மற்றும் சிவில் அமைப்புகளின் முதன்மைப் பொறுப்பாக இருக்க வேண்டும். தயவு செய்து இந்த ஒழுக்கக்கேடான விளையாட்டை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று அவர் தெரிவித்தார்.

# "உங்களில் ஒருவனே! உங்களுக்கு நல்லது"

தமிழ் பிரதிநிதித்துவம் என கூறிக்கொண்டு இளைஞர்கள் பலரும், கம்பஹாவுக்கு படையெடுத்துள்ளனர். ஆகையால், தமிழர்கள் இம்முறையும் ஏமாந்துவிடாமல், உங்களில் ஒருவனை அனுப்புவதன் ஊடாக, சேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் சசிகுமார் சுப்பிரமணியம் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில், ஊடகவியலாளர்களை, புதன்கிழமை (23) சந்தித்து கருத்துரைத்த அவர், 2011 ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்த நான், 2014 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பாக ஐக்கிய மக்கள் கட்சியின் டெலிபோன் சின்னத்தில் போட்டியிட்டு 23000 வாக்குகள் பெற்றேன்.

அரசியல் பயணத்தில், வத்தலை நகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். அதன் மூலம் பல சேவை மக்களுக்குச்



செய்தேன். கடந்த பாராளுமன்ற தேர்தலிலே போட்டியிட்டேன். அன்று கம்பஹா மாவட்டத்தில் ஒரு லட்சம் தமிழ் வாக்குகள் இருந்தன. எனினும், 23,000 வாக்குகள் மாத்திரம் பெற்றேன் அனைவரும் எனக்கு வாக்களிக்கவில்லை.

கடந்த காலங்களில் தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்பட்டன. அதுபோன்று இல்லாமல் இந்த முறை தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்படாமல், மக்கள் ஒன்று சேர்ந்து நல்ல தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

மக்களே சிந்தியுங்கள்' உங்களில் ஒருவர் பாராளுமன்றச் சென்றால்தான் உங்களின் பிரச்சனைகளைத் தீர்க்கலாம்.

உங்களின் வாக்குகளைச் சரியான முறையில் அளியுங்கள். இளைஞர்களின் இன்று விலை போகிறார்கள். எனினும், நன்றாகச் சிந்தித்து உங்களை வாக்குகள் அளியுங்கள்.

இளைஞர்களே! நான் சரியா? இல்லையா? அல்லது எனது பின்புலத்தைத் தேடிப் பார்த்துச் சிந்தித்து உங்கள், வாக்குகளை எனக்கு அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதனூடாகவே, கம்பஹா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். என்றார்.

# "ஒன்றுபட்டு உழைத்தால் இரு எம்.பிக்களை பெறலாம்"

அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்குத் துரோகம் செய்த எவரும் அரசியலில் நிலைக்கப்போவதில்லை, இம்முறை பொதுத் தேர்தல் முடிவுகள் இதனை உண்மைப்படுத்தும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பொத்துவிலில் புதன்கிழமை (23) நடந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட வேட்பாளர் என்.எச்.முனாஸை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

"பொத்துவில் பிரதேசத்தில் ஒரு பிரதிநிதித்துவம் அவசியம். இதற்காகவே, பல தடவைகள் எமது கட்சி இங்கு வேட்பாளர்களை நிறுத்தியது. 2015 பொதுத் தேர்தலில், எஸ்.எஸ்.பி.மஜீதை வேட்பாளராக்கினோம். இந்த ஊரில் மாத்திரம்



அவருக்கு 45000 வாக்குகள் அளிக்கப்பட்டன. இதையடுத்து வந்த பொதுத் தேர்தலில் முஷர்ரபை வேட்பாளராக்கினோம். பொத்துவில் மக்கள் வழங்கிய 95000 வாக்குகளுடன் வேறு பிரதேச வாக்குகளும் கிடைத்ததால், முஷர்ரப் எம்.பி.யாகத் தெரிவானார். இவரின் வெற்றிக்காக ஊரே உழைத்தது. பலரும் நிதியுதவி செய்தனர். ஓட்டோ ஓடுபவர்கள், நாளாந்தத் தொழிலாளிகள் மற்றும் வெளிநாடுகளில் உழைப்போர் எனப் பலரும் நிதியுதவி வழங்கி முஷர்ரபை வெல்ல வைத்தனர். ஏன்? ஊரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்கே. ஆனால், அவர் செய்த வேலைகளால், பொத்துவில் நற்பெயருக்கே களங்கம் ஏற்பட்டது.

எமது மார்க்கத்தில் ஹராமாக்கப்பட்ட சாராயக் கடையைத் திறந்து, தனது பொக்கற்றை பலப்படுத்தினார். கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாக மக்களிடம் பணம் வாங்கி மோசடி செய்தார். இவ்வாறானவர்களுக்கு எமது கட்சியில் இடமில்லை. இம்முறை மக்கள் அவருக்கு பாடம் புகட்டுவர்.

டொக்டர் இஸ்ஸடீன் போட்டியிட முன்வந்தபோதும், சில சிக்கல்களால் அவர் விட்டுக்கொடுத்தார். இதனால், சகோதரர் முனாஸை வேட்பாளராக நிறுத்தியுள்ளோம் என்று கூறினார்.

# நாமலிடம் இரண்டு மணிநேரம் விசாரணை

கேட்பது நம் நாட்டின் அரசியல் கலாசாரமாகி விட்டது.

"எங்களை வரச் சொன்னால், நாங்கள் வருகிறோம், நாட்டு மக்களுக்கு எங்களைப் பற்றி தவறான ஒரு படம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை பொய்யாக்கவே நான் இன்று வந்தேன்" என்றார்..

"2010 - 2015 ஒருவர் என் அலுவலகத்துக்கு வந்து பணம் வழங்கியதாகக் கூறப்பட்ட புகார் தொடர்பில் வாக்குமூலம் பெறவே எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது" என்று நாமல் கூறினார்.

# முந்திய தகவல் குறித்து என்ன செய்தீர்கள்?

இராஜதந்திர தூதரகங்களுக்கு அது பற்றி விளக்கியிருந்தால், எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கான பயண ஆலோசனை எச்சரிக்கையை தடுத்திருக்கலாம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் குறைந்தபட்சம் இப்போது இராஜதந்திர தூதரகங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடனான ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு விளக்க வேண்டும் மற்றும் இலங்கைக்கான பயண ஆலோசனையை நீக்க வெளிநாட்டுத் தூதரகங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மேலும் கூறினார்.

அறுகம்பே பகுதியில் உள்ள பிரபலமான சுற்றுலா இடங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தனது குடிமக்களுக்குப் பயண ஆலோசனையை வழங்கியதை அடுத்து, அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனையடுத்து, இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ரஷ்யா உட்பட மேலும் பல நாடுகளும் இலங்கை தொடர்பான தமது பயண ஆலோசனைகளை புதுப்பித்துள்ளன.

பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் காரணம் காட்டி, இலங்கையின் அறுகம்பே பகுதி மற்றும் தீவின் தெற்கு மற்றும் மேற்கில் உள்ள ஏனைய கடற்கரைகளிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேலியர்களுக்கு இஸ்ரேலின் தேசியப் பாதுகாப்புச் சபை அழைப்பு விடுத்திருந்தது.

இலங்கையில் அறுகம்பே பகுதியில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சந்தேகத்தின் பேரில் தற்போது இரண்டு சந்தேக நபர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் (TID) அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# "பாராளுமன்றத்தை சுத்தம்...

பொலன்னறுவை மாவட்டம் உள்ளிட்ட இந்நாட்டு மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டை புதிய திசைக்கு அனுப்பி வைப்பதற்காகத் தேசிய மக்கள் சக்திக்கு வெற்றியைப் பெற்று கொடுத்தார்கள். நாட்டில் இயல்பு நிலையைப் பேணி வந்து மக்களுக்கு அவசியமான நிவாரணங்களையும் நாட்டைக் கட்டியெழுப்ப அவசியமான திட்டங்களையும் வகுத்துக்கொண்டு மூவரைக் கொண்ட அமைச்சரவை இயங்கி வருகிறது.

நவம்பர் 14ஆம் திகதி வெற்றிக்குப் பின்னர் படிப்படியாக நாட்டைக் கட்டியெழுப்பத் தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள கொள்கை வெளியீட்டை நடைமுறைப்படுத்துவோம் என்பதை நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். ஜனாதிபதித் தேர்தல் மேடையில் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக இருந்த பாசறையில் இருந்து என்ன கோரினார்கள்? பௌத்த பிக்குமார்களுக்கு அன்னதானம் கிடைக்க மாட்டாது, பௌர்ணமி தினத்தை இல்லாதொழிப்பது உள்ளிட்ட பல விடயங்களைக் கூறினார்கள். அவையனைத்தும் பொய்யான புனைகதைகள் என்பது கடந்த ஒரு மாத காலத்துக்குள் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தேசிய மக்கள் சக்திக்கு எதிராக அந்த குற்றச்சாட்டுக்களை முன் வைத்தவர்களுக்கு தற்போது ஒரு கூட்டத்தைக் கூட நடத்த முடியாமல் போயுள்ளது. மக்கள் பொய்யைக் கேட்டுக்கொண்டிருக்க தயாரில்லை என்பதால், அவர்களின் குறைகூறல்களுக்குள்ளேயே அவர்கள் சிறைக் கைதிகளாக மாறியுள்ளார்கள்.

இந்த பொதுத் தேர்தல் எந்தவிதமான போட்டியும் இல்லாமல் சோர்ந்துபோன ஒரு தேர்தல் என சிலர் கூறுகிறார்கள். எனினும், இந்த தேர்தலில் இலங்கை வரலாற்றின் மிகவும் தனித்துவமான வெற்றியைத் தேசிய மக்கள் சக்திக்குப் பெற்றுக்கொடுப்பது உறுதியானதாகும்.

கடந்த பாராளுமன்றம் பற்றி மக்கள் மத்தியில் எதிர்ப்பு நிலவியது. தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்து சுங்கத்தில் அகப்பட்டவர்கள் அண்மையில் பாராளுமன்றத்திற்கு வந்து கையை உயர்த்தினார்கள். அதைப்போலவே, அங்குமிங்கும் கட்சி தாவி இறுதியில் எங்கே இருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியாத திரிபு நிலை உருவாகியிருக்கிறது.

கிட்டத்தட்ட ஒரு வருட காலமாகப் பாடசாலை மாணவர்கள் பாராளுமன்றம் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தளவிற்கு அருவருப்பு நிலைக்கு உள்ளாகியிருந்த பாராளுமன்றத்தைக் கலைத்து மக்களுக்கு வாய்ப்பினை வழங்கியிருக்கிறோம்.

பொலன்னறுவையில் தன்னிச்சையாகவே சுத்தம் செய்து கொள்ள விரும்பியவர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை. எஞ்சியுள்ளவர்களைச் சுத்தம் செய்வதற்காக பொலன்னறுவை மாவட்ட மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள கடமைப் பங்கினை தன்னிச்சையாகவே பொறுப்பேற்க வேண்டும். பொலன்னறுவைக்கு தலைமைத்துவம் வழங்கக் கூடிய, ஊழலற்ற, நேர்மையான குழுவினரை நாங்கள் முன்வைத்திருக்கிறோம். அதைப்போலவே, அங்குமிங்கும் கட்சி தாவாத, விலைபோகாத குழுவினரை நாங்கள் முன்வைத்திருக்கிறோம்.

அப்படியானால் நவம்பர் 14ஆம் திகதி திசைக்காட்டியின் குழுவினரைக் கொண்டு பாராளுமன்றத்தை நிரப்ப வேண்டும். நாங்கள் அவ்வாறு கூறும்போது, மற்றொரு கும்பல் பலம் பொருந்திய எதிர்க்கட்சியை அமைத்துக்கொள்வதற்காக அழைப்பு விடுக்கிறார்கள். அது அப்படியல்ல. இந்த நேரத்தில் பலம் பொருந்திய அரசாங்கமொன்று இருக்க வேண்டும். அதற்கான பணியை நாங்கள் ஆற்ற வேண்டும். கட்டம் கட்டமாக நாட்டை உறுதி நிலைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து அமுலாக்க வேண்டும் என்றார்.

## அம்பாறை மாவட்ட கரும்பு விவசாயிகளின்

# உரிமைகள் குறித்து அறிக்கை வெளியீடு

■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்

அம்பாறை மாவட்ட கரும்பு விவசாயிகளின் உரிமைகள் தொடர்பான முக்கியமான அறிக்கை வெளிட்டு வைக்கப்பட்டுள்ளது.

காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்டச் செயலணியும் மனித எழுச்சி அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு கொழும்பிலுள்ள லக்‌ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும் உபாய ஆய்வுகளுக்குமான நிறுவனத்தில் செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்றது.

காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்டச் செயலணியின் இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே.நிஹால் அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், பேராசிரியர் சமன் வீரக்கொடி, முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என்.எம்.அமீன்,



விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், நாட்டில் காணி உரிமைகளுக்காகச் செயற்படும் அமைப்புக்களின் பிரதிநிதிகள்,விவசாயிகள், துறைசார்ந்த செயற்பாட்டாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

நிகழ்வில், அம்பாறை மாவட்ட கரும்பு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் காணி உரிமை' எனும் அறிக்கை நூலை வெளியிட்டு வைத்த அதன் செயற்பாட்டாளர்கள், 'விவசாயிகளின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் முக்கியமான பிரச்சினைகளை தாங்கள் வெளிக்கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

நாடு சுதந்திரம் பெற்றது தொடக்கம் அடிப்படை மனித உரிமை மீறல்களில் பிரதான ஒன்றாகத் திட்டமிட்ட நிலப் பறிப்புக்கள் அமைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

காணிகளை இழந்த மக்கள் தமது காணி உரிமை சார்ந்து மிக நீண்ட காலமாகப் போராடி வருகின்றார்கள். அம்பாறை மாவட்டத்தில் 4,652 குடும்பங்களினது 14,127 ஏக்கர் பரப்பளவான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பான ஆய்வு ரீதியான ஆவணங்கள் தொகுக்கப்பெற்றுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் அணிதிரட்டப்பட்டு அவர்களுடைய உண்மையான பிரச்சினைகளை ஆய்வு ஆவணங்களாக உருவாக்கியுள்ளோம் இன மத பேதங்களுக்கப்பால் இந்த ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால அரசுகளின் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதன் மூலம் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதுடன், இதனூடாக பாதிப்பை இழைத்தவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

அதேவேளை, எதிர்காலத்திலும் மக்களது காணிகளைப் பறிக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் அரசினதும் அல்லது வேறெந்த ஆர்வக் குழுக்களினதோ வெளிச் சக்திகளினதோ கொள்கைளினால் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதற்கான இறுக்கமான சட்டங்களும் கொள்கைகளும்; அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஆகவே, இலங்கையில் காணியிழந்த அனைத்து சமூகங்களுக்குமான உரிமைகள் அரசியலமைப்பின் ஊடாகவே உறுதிப்படுத்தப்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் இலங்கையில் காணியிழந்து எவரும் நடுத் தெருவில் நிற்கும் நிலை வந்துவிடக் கூடாது என்று வலியுறுத்தினர்.













# வெள்ளத்தில் தத்தளிக்கிறது மன்னார்

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் புதன்கிழமை (23) இரவு முதல் பெய்த தொடர் மழை காரணமாக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம்,சௌதார்,எழுத்தூர் ,மூர்வீதி உட்பட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

எழுத்தூர் பகுதியில் உள்ள 30 குடும்பங்களின் வீடுகளுக்குள் நீர் புகுந்ததன் காரணமாக அவர்கள் எழுத்தூர் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.







# “அரசனை நம்பி புருஷனை கைவிட மாட்டார்கள்”

பதுளை பெருந்தோட்ட மக்கள் “அரசனை நம்பி புருஷனை கைவிட மாட்டார்கள்” என்று ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஹப்புத்தளை தொட்டலாகலை தோட்டத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அங்கு மக்களைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டு காலப்பகுதியினைப் போன்று இம்முறையும் பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் பல சதித்திட்டங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

தோட்ட நிர்வாகத்தின் அடாவடி செயல்பாடுகளின் போதும் சீரற்ற காலநிலையின் காரணமாக மக்கள் சிரமத்திற்கு உள்ளாகியிருந்த போதும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பின் போதும் அமைதி காத்தவர்கள்



இப்போது மக்களைத் தேடி பெருந்தோட்டங்களுக்குள் விஜயம் செய்து முதலை கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர்.

சாதாரணமாக பெரும் தோட்டங்களுக்குள் செல்லாது அவர்களுடைய வாகனங்கள் ஊர்வலம் செல்கின்றன. நம் மக்கள் யாரும் அவர்களுக்கு இடம் தரக்கூடாது நம்முடைய வாக்குகள் சிதறடிக்கப்பட்டால் அடுத்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் நாம் அனைவரும் அரசியல் அநாதைகளாக மாற்றப்பட்டு நெருக்கடியான நிலைமைக்குத் தள்ளப்படுவோம். நம்முடைய வாக்கு பலத்தைத் தேர்தலில் காட்டி, நம் ஒற்றுமையாய் நிலைநாட்டி தமிழ் பிரதிநிதி ஒருவரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம் என்றார்.




# சாரண ஆசிரியர்களுக்கு பயிற்சி நெறி

■ எம்.எப்.றிபாஸ்.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான முதலுதவி பயிற்சி நெறி மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் வியாழக்கிழமை (24) இடம் பெற்ற இந்நிகழ்வில், வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லா, வைத்திய அத்தியட்சகர் ஐ.எம்.ஜவாஹிர், பிரதம அதிதிகளாகவும், வைத்தியர்களான எஸ்.அகிலன், காதர், சாரண சங்கத்தின் போசகர்



யூ.எல்.எம்.ஹாசிம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட சாரண ஆசிரிய, ஆசிரியர்கள் இச்செயலமர்வில் கலந்து கொண்டு முதலுதவி சம்பந்தமான விடயங்களைக் கற்றறிந்தனர்.

# கூரிய ஆயுதங்கள் மீட்பு

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வியாழக்கிழமை (24) மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, வீடொன்றிலிருந்து ஐந்து வாள்கள் உள்ளிட்ட எழு கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வன்முறையில் ஈடுபடுவதற்குத் தயாராகக் குறித்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும், வீட்டில் வசித்த சந்தேக நபர் தலைமறைவான நிலையில் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# பரிசுகள் வழங்கும் நிகழ்வு

■ ஏ.எம்.ஜலீல்

இலங்கை வானொலியின் கந்துரட்ட (கண்டி) முஸ்லிம் ஒலிபரப்புச் சேவையின் ஏற்பாட்டில், மாணவர்களை பாராட்டி பரிசுகள் வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் நவம்பர் மாதம் ஞாயிற்றுக்கிழமை (03) காலை 10.00 மணிக்கு கம்பளை சாஹிரா தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது

இக்கல்லூரி அதிபர் இமாம் அப்சான் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம அதிதியாக கந்துரட்ட வானொலி நிலைய உதவி பணிப்பாளர் கே.ஜயசூரிய கௌரவ அதிதியாக கண்டி - மாத்தளை வை.எம்.எம்.ஏயின் சம்மேளனப் பணிப்பாளர் இஹ்திசாம் ஹுசைன்தீன் மற்றும் கொழும்பு முஸ்லிம் சேவையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஏ.எம்.ரலீம் ஆகியோருடன் அறிவிப்பாளர்களும் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



மீலாத் தினத்தை முன்னிட்டு, கந்துரட்ட முஸ்லிம் சேவையின் நிகழ்ச்சி தயாரிப்பாளர் எப்.சமீராவின் ஏற்பாட்டில் 'மின்னும் மின்மினிகள்' எனும் பெயரில் நடத்தப்பட்ட கவிதை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய திறமைமிக்க சகல இன மாணவர்களும் இந்நிகழ்வில் பிரமுகர்களால் பரிசளித்து கௌரவிக்கப்பட விருப்பதாகத் தயாரிப்பாளர் எப்.சிமாரா தெரிவித்துள்ளார்.

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** நிம்ரல் பவர் (பீவீඊ) எல்ஶடி
**கம்பனியின் புதிய பெயர்:** நிம்னா பவர் (பீவீඊ) எல்ஶடி
**பதிவு அலுவலக முகவரி:** இல.V162/114, நில்மினி உயன, மடோல, அவிஸ்ஸாவெல்ல.
**கம்பனியின் இலக்கம்:** பீவீ 00304311
**மாற்றம் நிகழ்ந்த திகதி:** 15.10.2024

**டைரக்டர்**
**நிம்னா பவர் (பீவீඊ) எல்ஶடி**

# கம்பஹா பிரதேச சபை

## 2025 ஆம் ஆண்டிற்கான விநியோகஸ்த்தர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்வதற்காக

2025 ஆம் ஆண்டிற்கான, பொருட்கள், சேவைகள் மற்றும் கட்டுமான ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் விநியோகத்திற்காக இந்த பிரதேச சபையில் பதிவு செய்ய விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகஸ்த்தர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, 2024.11.30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. விநியோகஸ்த்தர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்ய விரும்புவோர் பின்வரும் விவரங்கள் உட்பட தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024.11.30 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை அமுல்படுத்தும் அலுவலர், கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். "பதிவு தபாலில் அனுப்பலாம் அல்லது கையில் வந்து ஒப்படைக்களாம். விண்ணப்ப கவதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "விநியோகஸ்த்தர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பதிவு 2025" எனக் குறிக்கப்பட வேண்டும்.

   i. பொருட்கள் / சேவைகள், ஒப்பந்ததாரர்களின் விநியோகஸ்த்தர்களின் பெயர் மற்றும் முகவரி
   ii. தொலைபேசி / தொலைநகல், மின்னஞ்சல் முகவரி
   iii. பதிவு கோரப்படும் விநியோகம் / சேவையின் இலக்கம் மற்றும் பெயர் (அட்டவணையின்படி)
   iv. வணிகத்தின் பெயர் மற்றும் முகவரி
   v. வணிகப் பதிவு இலக்கம் (வணிகப் பதிவுச் சான்றிதழின் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
   vi. அனுபவம் பற்றிய விவரங்கள்
   vii. கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்பு துறையில் பதிவு செய்த விவரங்கள் (அந்த சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்)

- **எதிர்பார்க்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் அட்டவணை மற்றும் மாதிரி விண்ணப்பத்தை www.gampaha.ps.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**
- **ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.**

2. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை பணமாகவோ அல்லது காசோலையாகவோ "தலைவர், கம்பஹா பிரதேச சபைக்கு" செலுத்தலாம். (இதற்கான பண ஆணைகள் ஏற்கப்படாது)

3. ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்ய விரும்புவோர் எழுத்துப்பூர்வ ஆதாரம் மூலம் தங்களின் தகுதியை நிரூபிக்க வேண்டும்.

4. மேல் மாகாணத்தில் உள்ள விநியோகஸ்த்தர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

2024.10.25 ஆத் திகதி
கம்பஹா பிரதேச சபை மூலம்

**தொலைபேசி இல 033 2222020**

**எஸ். ஏ.என்.பீ.சுரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை.**

# அறுகம்பே அச்சுறுத்தலும் சுற்றுலாத்துறை மீதான பாதிப்புகளும்

இன்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர், அதாவது, 2019 ஏப்ரல் 21ஆம் திகதி அன்று நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் இன்னும் கைது செய்யப்படாத நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

புதிய ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க நியமிக்கப்பட்டதன் பின், ஒரு சில பொருட்களின் விலைகள் குறைந்தது. எனினும், லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் யுத்த மேகம் சூழ்ந்து உள்ளமையால், எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், யூதர்கள் மீது தாக்குதல் நடத்த ஈராக்கிலிருந்து இருவர் இலங்கைக்கு வருகைதந்துள்ளதாக இந்தியப் புலனாய்வுத் துறையினர் விடுத்திருக்கும் எச்சரிக்கை, இலங்கையைக் கதிகலங்கச் செய்துள்ளது. அந்த எச்சரிக்கையை அசட்டையீனமாக எடுத்துவிட முடியாது. ஏனெனில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் இந்தியப் புலனாய்வு பிரிவு இலங்கையை எச்சரித்திருந்தது.

அம்பாறை மாவட்டம், அறுகம்பேயில் வைத்து, இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதற்காக, இருவர் விலை பேசப்பட்டுள்ளனர். அவ்விருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். அறுகம்பேயில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அறுகம்பேயில் மட்டுமன்றி, வெலிகம, கொழும்பு , எல்ல, ஆகிய பகுதிகளில் உள்ள யூத வழிபாட்டு நிலையங்களுக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இஸ்ரேலியர்கள் பலரும், நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அமெரிக்கா, இந்தியா, கனடா, பிரித்தானியா, இஸ்ரேல் உள்ளிட்ட பல நாடுகள் தங்களுடைய பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வருட இறுதியில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்கும் புத்தாண்டு பிறப்புக்காகவும் காத்திருக்கும் நிலையில், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை கேள்விக்குறியாகிக் கொண்டு போகிறது. ஆகையால், சகல நாடுகளின் தூதரகங்களுக்கும், நமது நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் தெளிவுபடுத்தி, வெளிநாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது.

சுற்றுலா மூலம் 2024ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 2.17 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் ஈட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 2023ஆம் ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 66.1 சதவீதம் அதிகம் ஆகும்

2024ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1.36 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 50.7 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கையின் அந்நிய செலாவணி வருவாயை ஈட்டித் தரும் துறைகளில் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். 2025ஆம் ஆண்டில் 30 லட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரக்கூடும் என இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் எதிர்பார்த்திருக்கும் நிலையில், பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உகந்த சூழல் சுற்றுலாத் துறையின் இந்த சாதகமான போக்குக்கு காரணம் 2024ஆம் ஆண்டில், இலங்கை சுற்றுலாத்துறையானது 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க 4 பில்லியன் டொலர்களுக்கு மேல் வருமானத்தை ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டுவிடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி

இயலாது; என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக்கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாக்கு விற்பனையால் வாகன நெரிசல்

வவுனியா-பூந்தோட்டம் பிரதான வீதியில் உள்ள பாக்கு விற்பனை செய்யும் கடைகளால் வாகன நெரிசல் ஏற்படுவதுடன், விபத்துக்களும் இடம்பெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியின் வயல்வெளி கரையிலும் பூந்தோட்டம் பொதுச் சந்தைக்கு அருகிலும் இவ்வாறான ஒருவகை பாக்கு விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றது.

குறித்த வியாபார நிலையங்களிற்கு வருகைதரும் இளைஞர்கள் தமது வாகனங்களைப் பிரதான வீதிகளை அண்டி நிறுத்துவதால், அந்த பகுதிகளால் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

பிரதான வீதி மற்றும் சந்தை அமைந்துள்ள பகுதிகளானது அதிகமான வாகனங்கள் சென்றுவருகின்ற ஒரு வீதியாகக் காணப்படுகின்றது.

எனவே, குறித்த விடயம் தொடர்பாக பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பாக்கு விற்பனை நிலையங்களில் மாவா என்ற ஒருவகை போதைப்பாக்கு விற்பனை இடம்பெறுவதாகத் தெரிவித்து கடந்தகாலங்களில் வவுனியா பொலிஸாரால் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

–க.அகரன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 23

# அபிவிருத்தி வழி சமாதானம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

2002இல் தொடங்கிய பேச்சுவார்த்தைகளின் முக்கிய அம்சங்களில் ஒன்று அபிவிருத்தியின் வழி சமாதானத்தை அடையலாம் என்ற எண்ணக்கரு பரீட்சிக்கப்படும் களமாக இலங்கை அமைந்தமையாகும்.

இது குறித்த ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாவிட்டாலும், 2002-2008 காலப்பகுதியின் சமாதான முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன என்பதை விளங்கிக் கொள்வதற்கு “அபிவிருத்தி வழி சமாதானம்” என்ற எண்ணக்கருவையும், அது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட முறையையும் நோக்க வேண்டும்.

அரசியலுக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குகின்ற அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் அதன் நடைமுறை சார்ந்து இலங்கையானது அபிவிருத்தி மற்றும் அரசியல் அறிஞர்களால் தொடர்ந்து உதாரணமாகக் காட்டப்பட்டு வந்துள்ளது. அபிவிருத்தியும் அரசியலும் தொடர்பில் ஒரு முக்கியமான மூன்றாமுலக எடுத்துக்காட்டாக இலங்கை மீண்டும் மீண்டும் சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது.

இது 1960, 70களில் இலங்கையின் இறக்குமதி மாற்று தொழில் மயமாக்கல் மற்றும் சமூக நலன் மீதான வலுவான முக்கியத்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், 1977இல் பொருளாதார தாராளமயமாக்கலுக்கு மாற்றியமைக்கப்பட்டதற்கும் அத்துடன் நவதாராளவாதம், எதேச்சாதிகாரம் மற்றும் ஆயுதமேந்திய கிளர்ச்சிகளின் தொடர்ச்சியான சகவாழ்வுக்கும் நாடு உள்ளானதன் விளைவால் இலங்கை முக்கிய கவனத்தைப் பெற்றது.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தையின் இறுதி முயற்சியானது, தாராளவாத அமைதிக்கான உதவியாளர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் என பல சர்வதேச நடிகர்களின் தீவிர ஈடுபாட்டின் மூலம் வகைப்படுத்தப்பட்டது.

தெற்காசியத் துணைக் கண்டத்திற்கு அப்பால் சிறிதளவு சம்பந்தமில்லாத தரப்புகளுக்கு இடையேயான மோதலாக இருந்து, அமெரிக்கா தலைமையிலான ‘சர்வதேச சமூகத்தால்’ எளிதாக்கப்பட்டு நிதியளிக்கப்பட்ட தாராளவாத அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான சோதனைக்களமாக இலங்கை மாறியது.

சமாதான முன்னெடுப்புகள் முறிந்து, அரசாங்கத்தால் வெற்றிகரமான இராணுவப் பிரச்சாரத்தால் மாற்றப்பட்ட நிலையில், இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை தோற்கடித்து இராணுவ வழிகளில் சமாதானத்தை உருவாக்கும் சாத்தியத்திற்கான ஆதாரங்களை வழங்குவதாகச் சிலரால் பார்க்கப்பட்டது.

மற்ற பார்வையாளர்கள் மோதலின் இறுதிக் கட்டமானது இந்தியப் பெருங்கடலின் மாறிவரும் புவிசார் அரசியலையும், புதிய பாதுகாப்பு மற்றும் ஒழுங்கின் புதிய அரசியலையும் அத்துடன் வெற்றியாளரின் அமைதிக்கான அநீதி மற்றும் மனிதாபிமான செலவுகளையும் எடுத்துக்காட்டுகிறது என்று வலியுறுத்தினர்.

2002 முதல் 2008 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் மோதல் தீர்வு மற்றும் தாராளவாத சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான சர்வதேச மயமாக்கல், பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் சமாதானத்திற்கு இடையிலான தொடர்புகள் தொடர்பாக மாறிவரும் சர்வதேச உரையாடல்கள் மற்றும் நடைமுறைகளைப் பிரதிபலிக்கிறது.

போரின்போது, அமெரிக்க மேலாதிக்க முதலாளித்துவத்திற்கும் சோவியத் தலைமையிலான சோசலிசத்திற்கும் இடையிலான உலகளாவிய போட்டியின் கீழ் சர்வதேச உதவி பெருமளவில் அடக்கப்பட்டது. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் பற்றிய கவலைகள் நன்கொடையாளர்களால் குறைக்கப்பட்டன.

1980களின் பிற்பகுதியில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியும் மேற்கத்தியத் தாராளமயத்தின் வெற்றியும் ஆட்சியைப் பற்றிய தாராளவாத அக்கறைகளுக்கும் நவதாராளவாத வளர்ச்சி, தாராளமய ஜனநாயகம் மற்றும் தாராளமய அமைதிக்கும் இடையிலான தொடர்புகளுக்கு ஒரு இடத்தை வழங்கியபோது இது மாறியது.

1990களில் வெற்றிகரமான அபிவிருத்திக்குப் போர்களும் மோதல்களும் தடைகளை ஏற்படுத்துகின்றன, ஆனால், தாராளவாத அமைதியை உருவாக்குவதற்கான ஒரு கருவியாக அபிவிருத்தி இருக்கக்கூடும் என்பது கிட்டத்தட்ட அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

மேலும், உள்ளூர் மயமாக்கப்பட்ட போர்களின் நாடு கடந்த தாக்கங்கள் குறித்த அச்சம், அரசுகளுக்கு இடையேயான மோதல்களைத் தீர்ப்பதை உலகளாவிய பாதுகாப்பின் விஷயமாக மாற்றியது. இதைத் தொடர்ந்து, சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பது முரண்பாட்டைக் கருத்தில் கொள்ளாமல் மோதல்களை மாற்றுவதற்கும் தாராளவாத அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்தி உதவி வழங்கப்படுவது, மோதல் உணர்திறன் கொண்ட முறையில் உதவி வழங்குவது, மேலும் வளர்ச்சி உதவியை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது போன்ற பொதுவான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.

1990களின் பிற்பகுதியில் இலங்கையில் நிலவிய மோதல் நிலைமை இவ்வகையான தாராளவாத சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு உகந்ததாக இருந்தது.

அதேநேரம், இலங்கையின் உதவி நன்கொடையாளர்கள் இலங்கையைத் தாராளவாத அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு காட்சிப் பொருளாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலும் ஓரளவிற்கு அரசியலிலும் ஒத்த எண்ணம் கொண்ட பங்காளிகளைக் கண்டறிந்தனர்.

புலிகளின் பிரதான பேச்சுவார்த்தையாளர் அன்டன் பாலசிங்கத்தைச் சுற்றியுள்ள வலையமைப்பின் தாராண்மைவாதப் பொருளாதாரத்துக்கான விருப்பு ஆகியன தாராண்மைவாத அமைதியை நோக்கிய முன்னெடுப்பை இலகுவாக்கின. இவ்வாறு, உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே சர்வதேச அளவில் எளிதாக்கப்பட்ட பேச்சுவார்த்தை செயல்முறையை நிதி உதவிகளின் வழி, தாராளவாத சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளித்தனர்.

இருதரப்புக்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை முயற்சிகளை ஒப்பிடும் போது, 5ஆவது சமாதான முன்னெடுப்புகள் ஒரு குறிப்பிட்ட இராணுவ-பிராந்திய அதிகார சமநிலை மற்றும் அரசாங்கம் மற்றும் புலிகளுக்கு இடையில் சமமான அந்தஸ்து என்ற கருத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் வகைப்படுத்தப்பட்டது.

இந்த சமாதான முன்னெடுப்புகள் இரு நாடுகளுக்கிடையேயான நிலைப் படைகளுடன் கூடிய அரசுகளுக்கிடையேயான மோதல் தீர்வை ஒத்ததாக அமைந்தது.

அதேவேளை இது ஒற்றையாட்சி இலங்கை அரசை மீளக் கட்டியெழுப்புதல் அல்லது தனியான அரசில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை அடைதல் போன்ற இணக்கமற்ற அரசை உருவாக்கும் திட்டங்களாகும். இந்த பேச்சு முயற்சிகளை வரையறுக்கும் அம்சம் அமைதியை சர்வதேச மயமாக்குவதாகும். இது சர்வதேச பேச்சுவார்த்தைகள் மற்றும் போர்நிறுத்த கண்காணிப்பு போன்ற வடிவத்தை எடுத்தது.

தாராளவாத அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான சர்வதேச உதவி, மற்றும்; தாராளவாத அமைதி, நவதாராளவாத வளர்ச்சி மற்றும் அரச பாதுகாப்பு ஆகியவற்றின் இணைப்பு பற்றிய சர்வதேச சொற்பொழிவுகளின் அறிமுகம்.

1980களில் இந்தியா சமாதான முன்னெடுப்புகளில் முக்கிய பங்கைக் கொண்டிருந்த போதிலும், பிராந்தியத்தில் அவளது புவிசார் மூலோபாய நலன்கள் மற்றும் இலங்கையில் தமிழ்த் தேசியத்திற்கும் தமிழ்நாட்டு அரசியலுக்கும் இடையிலான தொடர்புகள் காரணமாக, இந்திய அரசாங்கம் மோதலுக்குக் கைகொடுக்கும் கொள்கையை ஏற்றுக்கொண்டது. இந்திய அமைதி காக்கும் படைகளின் தோல்வி மற்றும் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பிறகு இந்தியா நேரடியான பங்காற்றுகையில் இருந்து ஒதுங்கிக் கொண்டது.

மற்ற சர்வதேச அரங்காடிகள் மோதலை உள்நாட்டு விவகாரமாக பார்த்தனர். இது அவர்களின் புவிசார் மூலோபாய நலன்கள் மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்பிலிருந்து ஒப்பீட்டளவில் பிரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 5ஆவது சமாதான முன்னெடுப்புகள், அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தாராளவாத சமாதானத்தை எளிதாக்குபவர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் என முக்கிய பாத்திரங்களை வகிக்க இலங்கையின் நன்கொடையாளர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியது. மனிதாபிமான மறுவாழ்வு மற்றும் மேம்பாடு ஆகியவை மோதலைத் தீர்ப்பதற்கு முன்னோடியாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு விசித்திரமான வரிசை முறையால் செயல்முறை வகைப்படுத்தப்படத் தொடங்கியபோது இந்த வளர்ச்சி தெளிவாகியது.

நன்கொடையாளர் மாநாடுகளுக்கு இணைத் தலைவர்கள் (ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் நோர்வே) மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு அமைப்புக்கள் போன்ற நன்கொடையாளர் நாடுகளால் சமாதானத்தைக் கட்டியெழுப்பத் தாராளமான நிதி வழங்கப்பட்டது அல்லது உறுதியளிக்கப்பட்டது.

பரந்த அளவிலான சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் (என்.ஜி.ஓக்கள்) மற்றும் பலதரப்பு முகவர் அமைப்புகளும் மனிதாபிமான மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ரூடவ்டுபட்டன. குறிப்பாக 2004 இந்தியப் பெருங்கடல் சுனாமி பேரழிவிற்குப் பிறகு இவை இன்னொரு வடிவத்தை எடுத்தன.

1990களின் பிற்பகுதியிலிருந்து இலங்கையில் சமாதானம் பற்றிய கேள்வி முற்றிலும் சர்வதேச. மயமாக்கப்பட்டதை அவதானிக்கலாம். இது பெரும்பாலும் உதவி நிறுவனங்களின் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் இணைப்பதன் மூலம் நிகழ்ந்தது.


Mount Lavinia Hotel
Is Proud to Present,
The World's Greatest ABBA Show, Live in Sri Lanka!
ABBA
ARRIVAL
FROM SWEDEN
THE MUSIC OF ABBA
Experience a Night of ABBA's Timeless Hits with the Original Swedish Band
'ARRIVAL from Sweden-Music of ABBA' - Featuring the Popular Sri Lankan Band Redeemers
REDEEMERS the band
23RD NOVEMBER 2024 | PARADISE BEACH, MOUNT LAVINIA HOTEL | 8.00 PM ONWARDS
PLATINUM
LKR 50,000
Sold as Tables of 10
Table Price - LKR 500,000
Three-Course Dinner
1 Bottle of Imported Special Beverage (Keep Walking)
Chasers & Bites
GOLD
LKR 30,000
Individual Ticket
Bento Box Dinner & 2 Beverages
Tables of 10 - LKR 300,000
Bento Box Dinner & 2 Beverages
1 Bottle of Imported Special Beverage (Keep Walking)
Chasers & Bites
SILVER
LKR 15,000
Theatre Style Seating
BRONZE
LKR 7,500
General Admission, Standing
Tickets out now on MyTickets.lk For more information call - 011 2 711 711 / tickets@mountlaviniahotel.com
Official Print, TV & Digital Partner
Official Radio Partner
Lite 87.8
87.6 Islandwide

# “இருப்புக்கு பொருளாதார வளர்ச்சி முக்கியம்”

## உதய சூரியன் சின்னத்தில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கௌரி அனந்தன்

ச.சேகர்

நாட்டில் நிலவிய யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இனியும் தேசியம் பற்றிப் பேசி பிரிவினையை ஏற்படுத்தாமல், மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களை வகுக்க வேண்டியது முக்கியம். குறிப்பாக, வட பகுதி இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் பொருளாதார ரீதியில் உறுதியான திட்டங்களை முன்னெடுக்க வழியேற்றப்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

சர்வதேச ரீதியில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ள கௌரி அனந்தன், 2012 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் தமது பணிகளை முன்னெடுப்பதுடன், மக்களின் தேவைகளை இனங்கண்டு இயங்கியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, உதய சூரியன் சின்னத்தில் யாழ்ப்பாணம் □ கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் இலக்கம் 4 இல் போட்டியிடும் கௌரி உடன், வடக்கின் பொருளாதார நிலைமை தொடர்பில் அவரின் சிந்தனைகள், கொள்கைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் இலக்குகள் தொடர்பில் மேற்கொண்ட நேர்காணலின் போது, அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு,

தமிழர் இருப்பு, பொருளாதார அபிவிருத்தி என்பன எனது பிரதான கருப்பொருளாகும். கடந்த பதின்மூன்று வருடங்களாகப் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இளைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றிய வண்ணமுள்ளேன். 2011 ஆம் ஆண்டில் Yarl ஐடிஹப் எண்ணக்கரு உருவாக்கத்தில் இணைந்து யாழ்ப்பாணத்தை அடுத்த சிலிக்கன் பள்ளத்தாக்கு ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன். இதன் அடுத்த கட்டமாக ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்காவினை உருவாக்கும் முயற்சியை முன்னெடுக்க வேண்டும் என்பது எனது நோக்கம்.

இவ்வாறான திட்டங்களை முன்னெடுத்து, அவற்றினூடாக வட பிராந்தியத்தில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்பு வழங்குவது என எதிர்பார்ப்பாகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பதற்கு, வெளிநாட்டு நிறுவனங்கள் நாட்டில் முதலீடு செய்வதற்கு உகந்த, நெகிழ்ச்சியான சூழ்நிலை இல்லை என்றே கூறலாம். குறிப்பாக, வெளிநாட்டு நிறுவனமொன்று இலங்கையில் தனது கிளையை அல்லது அலுவலகமொன்றை நிறுவ வேண்டுமென்றால், அவற்றுக்கான அரச அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் மிகவும் சிக்கல்கள் நிறைந்தனவாக அமைந்துள்ளன.

இதனால் எம்மால் இந்த திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியவில்லை. இதுவரை காலமும் இந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் பிரதிநிதிகளுக்கும் இந்த விடயங்கள் தொடர்பான ஈடுபாடு மற்றும் எண்ணம் பரந்தளவில் காணப்படவில்லை. தமிழ்த் தேசியம் என்பது தொடர்பாக விடயங்களே அவர்களின் பிரதான பேசு பொருளாக அமைந்திருந்தது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், நான் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியிருந்த போது, சந்தித்த பலருடன் உரையாடிய போது, அவர்களுக்கு வெளிநாடு செல்வதில் அதிகளவு ஆர்வம் காணப்பட்டது. அதே போன்று பலர் பல்வேறு வழிகளில் வெளி நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த வண்ண முள்ளனர்.

தற்போதும் கூட, யாழில் பாடசாலைக் கல்வியைத் தொடரும் பிள்ளைகள், தமது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்ததும், உயர் கல்விக்காக கொழும்பு செல்கின்றனர், அல்லது வெளிநாடு செல்கின்றனர். அனைவரும் இவ்வாறு வெளியேறிவிட்டால், எமது பகுதிகளை யார் முன்னேற்றுவது? இளைஞர்களுக்கு உரிய இடத்தை வழங்க வேண்டும். அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இதே நிலைதான் வட பிராந்தியத்தின் பெண்களுக்கும் காணப்படுகின்றது. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஏதேனும் வழியில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட முயற்சிக்கையில் அதற்கு அனுமதி பெற்றுக் கொள்வது முதல், அவற்றைத் தொடர்ந்து முன்னெடுப்பது வரையில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கி அவர்களை ஊக்குவித்து வழிநடத்தும் திட்டம் தொடர்பான எண்ணக்கரு என்னிடம் உள்ளது. அதுபோன்று, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சிறு கைத்தொழில் ஊக்குவிப்பு வழங்கல் தொடர்பிலும் திட்டங்களைக் கொண்டுள்ளேன்.

வட பிராந்தியத்திலும் சுற்றுலாவுக்கான பல பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றை மேம்படுத்தி, அந்தத் துறையினூடாக பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துக்கும், நாட்டின் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பு வழங்கக்கூடிய திட்டங்கள் உள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பைப் பலப்படுத்துதல், மீனவர்களின் நிரந்தர வாழ்வாதார உரிமத்தைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்குத் திட்டங்கள் உள்ளன.

கடந்த ஆட்சிக் காலங்களில் விவசாய மக்களுக்குச் சேதன உரப் பயன்பாடு ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. ஆனாலும், இந்தத் திட்டம் தொடரவில்லை. அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அவ்வாறான பல திட்டங்களில் தொடர்ச்சித் தன்மை என்பது இல்லை.

அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டால், அந்தத் திட்டம் முழுமை பெறும் வரையிலும், அதன் நிலைபேறாண்மையை உறுதி செய்யும் வகையிலும் தொடர்ச்சியாக அரசாங்கத்தினால் ஆதரவுகள் வழங்கப்பட்டு, கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவை அனைத்துக்கும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் குரல் பாராளுமன்றத்தில் அவசியம். துரதிர்ஷ்டவசமாக, இதுவரையில் அவ்வாறான குரல்கள் எதுவும் பாராளுமன்றத்தில் ஒலித்ததில்லை. எனது எதிர்பார்ப்பு, அந்தக் குரலாகத் திகழ்ந்து, எமது மக்களின் இருப்பையும், வட பிராந்தியத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் பங்களிப்பு வழங்கும் குரலாக திகழ்வதாகும். அதற்காக அனைவரும் என்னை தெரிவு செய்வார்கள் என எதிர் பார்க்கின்றேன் என்றார்.


### கௌரி

இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியும் அமெரிக்காவின் திட்ட மேலாண்மை நிறுவனத்தில் சான்றளிக்கப்பட்ட திட்ட மேலாண்மை நிபுணரும் ஆவார். அவர் நியூபக்கிங்ஹாம் ஷயர் பல்கலைக்கழகத்தில் (யுகே) தனது இளமானி சட்டப்படிப்பை முடித்தத்துடன், தற்போது சர்வதேச மனித உரிமைகள் சம்பந்தமாக சட்ட முதுநிலைமாணி மாணவராக இருக்கிறார்.

அவர் தனது சமூகப்பணிகளுக்காக ஐக்கிய அமெரிக்காவின் இராஜதந்திர உறவுகள் மனித உரிமைகள் மற்றும் அமைதிக்கான சர்வதேச ஆணையத்தின் (ICDRHRP) சிறப்புவிருதைப் பெற்றுள்ளார்.



---



# விட்டுவிடாதே

ஒரு உண்மைகாதல்
என்ன செய்யும்
ஒன்றுமே செய்யாது
எது நடந்தபோதும்
ஒன்றும் செய்யாது
கொஞ்சமும் மாறாது...

இன்னும் இன்னும்
இறுக்கிப் பற்றியபடி
அப்படியே கிடக்கும்
உடைந்து, நொந்து
அழுது துவண்டு...

இன்னும் இன்னும்..
கதறி கெஞ்சி
உருகி உணர்வற்று
அப்படியேமெல்லமெல்ல
அழிவடைந்துகலைந்து
காணாமல் தான் போகும்...

நிற்க,
இது எல்லாம் தாண்டி
பிடித்ததை கேட்பதை
வேண்டியதை
போராடுவதை
பெற்றுக்கொடுப்பதுதான்
அப்படியே பற்றிக்கொள்
விட்டுவிடாதே
என வழங்கி விடுவதுதான்...

பிரியமுடன்
சிரித்துக்கொண்டு
வழிவிடுவதுதான்.
அழகாய் வாழ்ந்துவிடு'
எனஅன்பாய்
நகர்ந்து விடுவதுதான்'...

என்னைக் கேட்டால்
இந்த இரண்டாவது வகைதான்
மெய்க் காதல் என்பேன்
சொல்ல வார்த்தையற்ற
ரணம்
வலிகளெல்லாம் எந்த கவிதையிலும்
காதலிலும் ஒருபோதும் சேராது...

அது உரியவருக்குமட்டுமே சொந்தம்...

வசு – திருமலை



# யாதுமாகி



எங்களுக்கு எல்லாமாகி
கிடக்கிறது கடல்
வலையெடுத்து இரையெடுத்து
ஊசெடுத்துசோறு கட்டி
தண்ணீர் சுமந்து
அலைமறித்து
ஏறும் போது

கட்டிய மனைவி
பெற்றெடுத்த பிள்ளைகள்
ஒருகணம்
உள்ளத்தில் கையசைக்க
உடலைதொட்டு
அணைத்துக் கொள்ளும்
உப்புச் சுவை...

பகலும் இரவும் தலைகோதி
மகிழும் விரித்தவலையில்
சிக்கியமீன்களில்
நேற்றையகடனும்
இன்றையலாபமும்
மணம் வீசும்...

உண்டுகழித்து
உறங்கிஎழுத்து
நடந்துகதைத்து
மகிழும் படகு
கடலில் எங்கள் இல்லம்...

வியர்வைகலந்து
கண்ணீர் கலந்து
பரந்துவிரிந்து
நாங்கள் வாழும் கடலே
நாங்கள் மீளும் கடலே
உரத்துச் சொல்கிறோம்
நீயேஎங்கள் சொர்க்கம்
நீயேஎங்கள் சொர்க்கம்...



– காரையன் கதன்

# களநிலை

சாளரத் தாபனத்தில்
சில கோவைகளை
புரட்டிப்போடுது
தென்றல்...

முன் எப்போதும்
இல்லாதவாறு
கலைந்து கிடக்கும்
கூந்தலை
முடிந்து கொண்டாள்
மழையின் காதலி...

இப்போது
அவனின் நிலை
கட்டியணைப்பதா
கலைந்து செல்வதா...

மழையாக நின்றவன்
இன்று மீண்டும்
மேகமானான்...

– திருமலை சிட்டு



# இன்பம் இதுதான்

மேகம் சூழ்ந்துநின்று
மின்னல் பூத்திருக்கும்
வெண்பஞ்சுதிதறிவிழும்
வான்வெளியில் மாக்கோலம்

ஒற்றைக் காலூன்றிமண்ணில்
மரங்கள் குடைவிரிக்கும்
தென்றல் வந்துகாதுகளில்
கதைசொல்லிச் செல்லும்--


வான்வெளியில் தேனமுதாய்
மழைமொக்குகள் காலூன்றும்
குளிர்ந்தநீரோடைகளிலே
கயல்மீன்கள் துள்ளியெழும்..

இயற்கைஅழகை இரசித்தபடி
உள்மனம் குதூகலம் கொள்ளும்
இயற்கையழகைஉள்வாங்கியபடி
பிரியாதவரம் கேட்டுமறையும்

– க.யோகானந்தன்



# இணைப்புகள்



இனிவரும் ஏழேழு ஜென்மத்திலும்
தொடரும் போல - உன்
மீதான நான் கொண்ட
பூர்வ ஜென்ம இணைப்புகள்...

இலக்கியங்கள் சொல்லும்
இணைப்புகளையும் தாண்டி
இணைகிறது நெஞ்சம்...

என் வழிகள் எல்லாம்
வலிகளாக இருப்பதில்லை
வலி மிகும் இடமும்
வலிமிகா இடமும் இணைந்து விடுகிறது...

இலக்கணத்தையும் ஆராய துணியும்
நமது நேசத்தின் இணைப்புகள்...

முழுமை பெறாமல் நின்ற சொல்லையும்
பொருளையும் குறித்து எச்சமாகி
நிற்காதது தான் - எம்
காதலின் இணைப்புகள்...

உன், என் பெயர்களைக் கொண்டு
பெயரெச்சம் இங்கே முற்று பெற்றது
எச்சமின்றி தமிழ் தந்த தொகை சொல்லாய்
நீயும் நானும் இணைந்து விட்டோமே
திராவிட மொழியின் மூத்த மொழியாய்
அமைந்த தமிழிலே...

செம்மையாய் தேனாய் இணைந்த
இலக்கியம் இனி நம் காதலை
பற்றியே பேசும் இரு கரம் சேர்த்து
இணைந்திருப்போம்
இசைந்திருப்போம் முத்தமிழாய்...

– சசிரேகா சிவப்பிரகாசம்
உடப்புசல்லாவை





# உயிராபத்து பயணம்







எம்.என்.எம்.புஹாரி

மனித வாழ்க்கையில் போக்குவரத்து வசதி என்பது வாழ்வியலோடு பின்னிப் பிணைந்ததாகவும் இன்றியமையாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில், போக்குவரத்து செய்வதில் சிரமங்ளை எதிர்நோக்கும் மக்கள் இலங்கையின் பல இடங்களில் வாழ்ந்தும் வருகின்றனர்.

அந்த வகையில், திருகோணமலை -மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஷாபி நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வேதத்தீவு கிராம மக்கள் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் நாள்தோறும் இழுவைப் பாதையூடாக உயிராபத்துக்களுக்கு மத்தியில் பிரயாணம் செய்து வருகின்றனர். இவர்கள் தமக்கான பாலம் ஒன்றை அமைத்துத்தருமாறு பல்வேறு தரப்பினரிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை எதுவுமே நடந்ததாக இல்லை.

மூதூர்-ஷாபி நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வேதத்தீவு கிராமத்திலிருந்து மூதூர் நகருக்குச் செல்வதற்குத் தரைவழி போக்குவரத்து இல்லாமையினால் சுமார் 50 மீற்றர் தூரத்தை களப்பு கடலில் போடப்பட்டுள்ள இழுவைப் படகு மூலம் மக்கள் பயணம் செய்து வருகின்றனர். தினந்தோறும் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இப் படகு சேவை இடம்பெறுகின்றது. இதனைத் திருகோணமலை வீதி அபிவிருத்தி திணைக்களம் செய்து வருவதோடு, அதற்காக ஒரு ஊழியரையும் கடமைக்கு அமர்த்தியுள்ளனர். குறித்த கடமையில் உள்ளவர் கடமை முடிந்து சென்று விட்டால், மறு திசையில் படகு நிறுத்தி வைக்கப்படுமாக இருந்தால், எதிர்த் திசையில் நிற்பவர்கள் களப்புக் கடலூடாக 50 மீற்றர் தூரத்திற்கு நீந்திச் சென்று இழுவைப் படகை எடுத்து வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.


ஷாபிநகர்-வேதத்தீவில் உள்ள பெண்கள் யாருக்காவது இரவு வேளையில் பிரசவ வழி ஏற்பாட்டாலோ, பாம்பு தீண்டினாலோ அல்லது அவசர நேரங்களில் பாதை வேதத்தீவு பக்கம் இல்லாமல் மற்றைய திசையில் நிறுத்தி வைக்கப்பட்டாலோ நீந்திச் சென்று இழுவைப் படகைக் கொண்டு வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. வேதத்தீவு களப்பில் அதிகளவான முதலைகள் காணப்படுகின்றன. இதனால் களப்பில் நீந்துவதற்கு அச்சமடைவதாகவும் ஒரு தடவை நீந்திச் சென்ற ஒருவருக்கு முதலை கடித்துக் காயமடைந்த துக்ககரமான சம்பவம் இடம்பெற்றதாக ஷாபிநகர் கிராமவாசியும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான எம்.தஸ்லீம் கவலை தெரிவித்தார்.

தினந்தோறும் வேதத்தீவு இழுவைப் பாதையை கிராமத்திலுள்ளவர்களும் தொழிலில் ஈடுபடுவோருமான இன, மத பேதங்களுக்கு அப்பால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். இதைவிடப் பாடசாலை செல்கின்ற மாணவர்கள், விவசாயம் செய்வோர், விறகு தொழிலில் ஈடுபடுவோர், அரச அலுவலகங்களில் பணிபுரிகின்றவர்களும் இப் பாதையூடாக பயணித்து வருகின்றனர்.









**“ வேதத்தீவு பாதையைக் கடந்து செல்வோரது நலன் கருதியும் வேத தீவில் பாலமுருன்று அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். புதிய அரசாங்கமாவது இப்பாலத்தினை அமைத்துத் தரும் என்கின்ற பெரும் எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றனர்**

தேர்தல் காலங்களில் மாத்திரம், வேதத்தீவுக்கு பாலத்தை அமைத்து தருவோம் என்று கூறும் அரசியல்வாதிகள், தேர்தல் முடிந்து வெற்றி அல்லது தோல்வி அடைந்து விட்டாலோ திரும்பிப் பார்ப்பது கூட கிடையாது. வெறுமனே தேர்தல் வாக்குறுதியாக மாத்திரம் காற்றில் பறந்து செல்கின்றது. இதைவிட, வேதத்தீவில் பாலம் அமைத்துத் தருவதாகக் கூறி ஒரு தடவை அடிக்கல் நடப்பட்டதாகவும் மற்றுமொரு தடவை அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கும் மக்கள், இதுவரை பாலம் என்பது அமைத்துத்தரப்படவில்லை. தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றோம். இதற்காக செலவழிக்கப்பட்ட நிதியைக் கொண்டே பாலம் அமைத்திருக்க முடியுமெனவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதைவிட, மூதூர்-வேதத்தீவில் தேர்தல் வாக்களிப்பு நிலையம் இல்லாமையால் ஷாபிநகர் கிராமத்திலுள்ள பாடசாலையில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையத்திற்கு இழுவைப் படகு மூலமே வாக்களிப்பதற்குச் செல்வதாகவும், ஏற்றி இறக்குவதில் காலதாமதம் ஏற்படுவதாலும், வயதானவர்கள் சிலர் பாதையில் பயணிப்பதில் சிரமம் என்பதால் வாக்களிப்பதற்குச் செல்வதில்லை. இதனால் தமது ஜனநாயக உரிமையை கூட நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுவதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வேதத்தீவு பாலம் புனரமைப்பு விடயம் எந்த நிலையில், உள்ளது என்பது தொடர்பாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக்கிடம் வினவியபோது, ஷாபிநகர் -வேதத்தீவு இழுவைப் படகுச் சேவையானது தமது பிரதேச செயலகப் பிரிவில் காணப்பட்டாலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பிலே உள்ளது. இது விடயம் தொடர்பாக அவர்களே பொறுப்புச் சொல்ல வேண்டும். இருப்பினும் மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்களில் வேதத்தீவு பாலம் அமைப்பது தொடர்பாகப் பல தடவைகள் பேசப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளும் இது விடயத்தில் பேசியுள்ளனர். உண்மையில் வேதத்தீவு கிராம மக்களின் நலன் கருதி, அங்குப் பாலமொன்று கட்டாயம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். பொறுப்பு வாய்ந்த மூதூர் பிரதேச செயலாளர் என்கின்ற வகையில் என்னாலான ஒத்துழைப்புக்களை வழங்குவேன் என தெரிவித்தார்.

எது எவ்வாறு இருந்த போதிலும், தொழிலில் ஈடுபடுவோரதும்இஅத்தியவசிய தேவைகளுக்காக வேதத்தீவு பாதையைக் கடந்து செல்வோரது நலன் கருதியும் வேத தீவில் பாலமுருன்று அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். புதிய அரசாங்கமாவது இப்பாலத்தினை அமைத்துத் தரும் என்கின்ற பெரும் எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றனர் மூதூர் ஷாபிநகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வேதத்தீவு கிராம மக்கள்.



# நெடுந்தீவும் பெருக்கமரமும்



செல்வக்குமாரசாமி அபிசேகன்,
ஊடகத்துறை,
மூன்றாம் வருட மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்



நெடுந்தீவு இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாண குடாநாட்டுக்கு தென்மேற்கில் அமைந்துள்ள ஏழு தீவுகளில் இதுவும் ஒன்றாகும். இத்தீவானது யாழ்ப்பாணத்தில் இருந்து மற்றைய தீவுகளிலும் பார்க்க 45 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது இதனால் தான் இத்தீவு நெடுந்தீவு என அழைக்கப்படுகின்றது. இந்தியாவின் இராமேஸ்வரக் கரையிலிருந்து இதன் தூரம் 38 கிலோ மீற்றர் மட்டுமே. புங்குடுதீவில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. நெடுந்தீவு வடக்குத் தெற்காக 6 கிலோ மீற்றர் அகலத்தையும், கிழக்கு மேற்காக 8 கிலோ மீற்றர் நீளத்தையும் கொண்ட ஒரு சரிந்த இணைகர வடிவில் 30 கிலோ மீற்றர் சுற்றளவையும், 48 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் கொண்டுள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இத்தீவானது தலைதீவு, பசுத்தீவு, பால் தீவு, அபிஷேகதீவு, தயிர் தீவு போன்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. ஐரோப்பிய இனத்தவரான ஒல்லாந்தர் இத்தீவை ‘டெல்வ்ற்’ என்று பெயரிட்டு அழைத்தார்கள் தற்காலத்தில் இப்பெயரானது வழக்கில் உள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இலங்கையின் தீவுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. அந்தவகையில், நெடுந்தீவும் பல்வேறு தனித்துவங்களைத் தன்னுள் வைத்திருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் இந்த பெருக்குமரம். நெடுந்தீவு இறங்கு துறையிலிருந்து கிழக்காக சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும்.

## பெருக்கு மரத்தின் மருத்துவ சிறப்பு

இலங்கையில் இம்மரங்களினை காண்பது மிகவும் அரிதாகும். இம்மரமானது வெப்பமண்டல காடுகளில் வளர்கின்றன. இவை ‘பாபப்’ என்று அழைக்கப்படுகின்றன. மரத்தின் சுற்றளவானது விசாலமானது. மரமானது குகை போன்று இருப்பதனால் அதன் உள்ளே ஆறேழு பேர் நிற்கலாம். அந்நியர் ஆட்சிக் காலத்தில் மரத்தில் உள்ளே ஒளிந்திருந்தே நமது முன்னோர் அவர்களுக்கு எதிராக உருமறைப்பு மற்றும் கொரில்லா தாக்குதல்கள் போன்றவற்றைச் செய்தார்கள் என வரலாறு கூறுகின்றது. இவை வெப்ப காலங்களில் கூட வறண்டு விடுவதில்லை. ஏனென்றால், மண்ணுக்குள் பரந்து விரிந்து இருக்கின்ற இவற்றின் வேரானது அதிகளவு நீரைச் சேமித்து வைக்கக் கூடியது வறட்சி காலப்பகுதியில் நம்மவர்கள் இந்த மரத்தின் சாற்றைப் பிழிந்து தான் தாகத்தைத் தீர்த்துக் கொண்டார்களாம் என்று வரலாறு கூறுகின்றது.

இதன் அடி மரம் மிகவும் விசாலமானது. இதன் பூக்கள் வெண்மை நிறமாகவும் காய்கள் வட்ட வடிவ பச்சை நிறமாகவுமுள்ளன. இதன் இலைகள் ஐந்தாகப் பிரிந்து மனித விரல்களைப் போல காட்சிதருகின்றன.

இந்த மரம் மனிதனின் ஐந்து முக்கியமான நோய்களை குணப்படுத்தும் வல்லமை கொண்டது என்கிறார்கள் நெடுந்தீவு வாசிகள். குருதிப் பெருக்கம், நரம்புத் தளர்ச்சி, அம்மை, இரத்த அழுத்தம், தொற்றுநோய் ஆகியவற்றுக்குப் பெருக்கு மரத்தின் இலைகள், பட்டைகள், வேர்கள் போன்றவை பயன்படுகின்றன.

சித்த மருத்துவத்தில் நோய் குணமாக்கும் மருந்துகளில் பெருக்கு மரம் பிரதான இடத்தை வகிக்கிறது. வேர்களைப் பிழிந்து சாறெடுத்துக் குடித்துள்ளனர். அது அவர்களின் நோய்களைக் குணப்படுத்தியதுடன், நீண்ட ஆயுளையும் கொடுத்துள்ளது.

இத்தகைய மரங்கள் இலங்கையில் அரிதாகவே உள்ளன.

**“ பெருக்குமரமானது மனிதனின் ஐந்து முக்கியமான நோய்களை குணப்படுத்தும் வல்லமை கொண்டது என்கிறார்கள் நெடுந்தீவு வாசிகள்**

இன்று இம்மரங்கள் காலநிலை மாற்றங்களினால் அழிந்து கொண்டு செல்கின்றன. இந்த மரத்திற்கு விசேடமொன்று இருக்கின்றது. நெடுந்தீவில் இருக்கும் பெருக்கமரம் தான் யாழ். மாவட்டத்திலேயே மிகப்பெரிய சுற்றளவான மரமாகும் அதே நேரம் தென்னாசியாவின் இரண்டாவது பெரிய சுற்றுலா மரமும் இதுவாகும். இம்மரத்தில் ஒன்பது இனங்கள் உள்ளன.

இதில் ஆறு இனங்கள் மடகஸ்த்தானுக்கு சொந்தமானது இரண்டு இடங்கள் ஆபிரிக்கத் தீவுக்கும் அரேபியத் தீவுக்கும் இன்னொரு இனம் அவுஸ்திரேலிய தீவுக்கும் சொந்தமானதாகும். இது ஐந்து முதல் 30 மீற்றர் உயரத்திற்கு வளரக்கூடியது ஏழு முதல் 11 மீற்றர் வரை விட்டம் கொண்டு வளரக்கூடியது பெருக்கம் மரம் தமது உடற்பகுதியில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றர் நீரைச் சேமித்து வைக்கக்கூடியது இந்த இசைவாக்கமானது, கடுமையான வறட்சியைத் தாங்குவதற்காகவும் இம்மரமானது குண்டாகவும் கிளைகள் வளர்ந்தும் வளராதது போல காணப்படும் வித்தியாசமான உருவ அமைப்பைக் கொண்டதாக இம்மரம் காணப்படுகின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழக்கூடிய மரங்கள் இவை பழங்காலத்தில் மிகப்பெரிய மரங்களாக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது வருடத்தில் ஒன்பது மாதங்கள் பெருக்கம் மரத்தில் இலைகள் இருக்காது. அதனால், மரத்தை தலைகீழாக நட்டு வைத்தது போல் தோற்றத்தில் இருக்கும் மரத்தின் உடைய உட்பகுதி 15 மீற்றர் வரை மென்மையான நார்களால் நிரம்பி இருக்கும்.

ஆபிரிக்க கலாசாரத்தில் ‘பாபப்’ மரங்களை வெட்டுவதற்கு அனுமதி இல்லை. மரங்கள் பட்டுப் போனால் அது ஏதாவது விபத்தில் சாய்ந்தாலோ சிறிய கிளைகளில் இருந்து புதிய மரங்கள் துணிந்து வளர்ந்து விடும். இதனால் இம்மரங்களுக்கு மரணமே இல்லை என்று சொல்வதுண்டு. அரேபியர்கள் ஐரோப்பியர்கள் ஆதரிக்கத் தேசங்களில் இருந்து எடுத்து வந்து தங்களுடைய குதிரைகளுக்கு உணவு மருந்துகளைக் கொடுப்பதற்காக இவ்வாறான மரங்களைப் பயிரிட்டு இருக்கின்றார்கள் என அறிய முடிகின்றது. நெடுந்தீவிலும் இதற்காகவே இம்மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

காலணித்துவ காலத்தில் அடையாளமாக நிற்கும் இந்த மரம் இயற்கை மரபுரிமையாக பாதுகாப்பது பொருத்தமானதாகும்.

ஆரம்பத்தில் கவனிக்கப்படாது காணப்பட்ட இந்த மரம் நெடுந்தீவுக்கான சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பினாலும் துன்பங்கள் பாதுகாத்தல் சட்டத்தினாலும் நெடுந்தீவு பிரதேச சபையினால் நிதிய ஒதுக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றது.

எனினும், வரலாற்று உண்மைகளைப் பகிர்கின்ற மரத்தில் மக்கள் பெயர்கள் எழுதியும் அதன் பட்டைமேல் கிறுக்கல்கள் விளையாடி இருக்கின்றார்கள். பாதுகாப்பு பராமரிப்பில் உள்ள குறைபாடுகள் ஆகவும் மரபுரிமை சின்னத்துக்கு எதிரான செயற்பாடாகவும் தான் இவற்றை நாம் கருத முடியும். இப்படியே இவ்வாறு சென்றால் நமது வரலாற்றின் தொன்மங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்குக் கையளிப்பது எமது தலையாய கடமையாகும்.

“சமூக மாற்றமே உழைக்கும்

# வர்க்கத்தின் உந்து சக்தி”

## ஆசிரியர் மற்றும் அரசியல் களத்தில் டேவிட் சுரேன்



சுப்பிரமணியன் ஜனுர்ஷா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

அவசரமாக ஓடிக் கொண்டிருக்கும் உலகில், ஒரு துறையில் பயணிப்பதே சிரமம். அதிலும் இரு வேறு துருவங்களில் தனது வாழ்க்கை பயணத்தை அர்ப்பணிப்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஆளுமைகள் பலர் உளர். அவர்களில் நான் கண்ட ஆளுமை ஒருவருடன் சற்று பயணப்பட்டுப் பார்க்கலாம். சமூக மட்டத்தில் ஆசானாகவும் ஒரு பக்கம் அரசியல் துறையிலும் செயற்பட்டு வரும் ஆளுமை ஒருவர் தான் டேவிட் சுரேன் என்பவர். மாத்தளை மாவட்டத்தில் உக்குவளைப் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர் பதினான்கு வருடங்கள்(14) ஆசிரியராக அரசறிவியல் மற்றும் வரலாறு போன்ற பாடங்களைக் கற்பித்து வருகின்றார். அதுமட்டுமின்றி, பதினைந்து வருடங்களாக(15) புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியில் மத்தியக் குழு உறுப்பினராகவும், மலையக பிராந்திய செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவ்வாறு இரு துறைகளிலும் சேவையாற்றி பலரது கவனத்தை ஈர்த்தவராகத் தன்னை தகவமைத்துக் கொண்டுள்ள இவருடன் அண்மையில் நடத்திய நேர்காணலின் தொகுப்பு.

**கேள்வி: ஆசிரியர் மற்றும் அரசியல் இரு துறைகளில் தாங்கள் அதிகம் ஈடுபாடு கொண்டிருக்கக் கூடிய துறை?**

பொருளாதார தேவைக்கு கட்டாயம் ஒரு தொழில் கையில் இருப்பது அவசியம். அந்தவகையில், எனது கல்வித் தகைமையுடன் ஆசிரியர் தொழிலை மேற்கொள்கின்றேன். அத்தோடு எனது அதிகபட்ச ஆர்வம் முழு நேரமாக அரசியல் செய்வதே. அரசியல்வாதியாக அல்லாமல் அரசியலை ஒரு சேவையாக ஆற்றுவதிலே அதிக ஆர்வம் காட்டுகின்றேன். ஏனெனில், அந்த அளவிற்கு சமூகத்தில் தேவைகளும், பிரச்சினைகளும் நிறைந்து காணப்படுகின்றன. உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் முயற்சியில் இயங்கி வரும் எங்களது அமைப்பினை மேலும் பலப்படுத்தி விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை அதிகம் காணப்படுகின்றமையினால் மக்களுக்காக செயலாற்றுவதற்காக அரசியல் துறையில் பயணப்படுவதில் அதிக ஈடுபாடு கொள்கிறேன்.

**கேள்வி: உங்களை அரசியல் களத்தில் கால் பதிக்க வைத்த உந்துதல் எது?**

ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பியோ விரும்பாமலோ அரசியலினுள் உள்வாங்கப்படுகின்றார்கள் என்பது தவிர்க்க முடியாது. மக்கள் நிம்மதியானதும் மகிழ்ச்சியானதுமான வாழ்க்கையை வாழ்வதற்கு அனைவராலும் விரும்பப்படுகின்ற அரசியலது தேவைப்பாடு உள்ளது. அந்தவகையில், நான் பார்த்து வளர்ந்த சூழல் அனுபவங்கள் என்னை அரசியலில் களமாட தூண்டியது. வடக்கு கிழக்குகளில் தேசிய இனப்பிரச்சினை வெடித்தாலும் அதன் தாக்கம் மலையகப் பகுதிகளையும் விட்டு வைக்கவில்லை. இனவசைப் பாடல்கள், இனங்களிற்கிடையிலான முறுகல்கள் மற்றும் இன ஒடுக்குமுறைகள் என்பன விதிவிலக்கல்ல. மேலும், பத்திரிகை வாசிப்பு, செய்தி நுகர்விற்கான வாய்ப்பு, எனது குடும்பச் சூழல் மற்றும் பொதுமட்ட அரசியல் பேச்சுகள் என நேரடியாகவும் செவி வழியாகவும் நான் பார்த்து, கேட்ட அனுபவங்கள் அரசியல் களத்திற்கு என்னைத் தானாகவே உள்வாங்கிக் கொண்டது. “சமூக ஊக்கம் என்பது இயல்பானது”. பட்டப்படிப்பில் ஈடுபட்டிருக்கும் போது அரசியல் கட்சியில் இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்து இன்றுவரை நகர்ந்து கொண்டிருக்கின்றேன்.

**கேள்வி: ஆசிரியர், அரசியல் கட்சி உறுப்பினர் மற்றும் குடும்பஸ்தர் என மூன்று வகிப்பங்காற்றுவதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கிறீர்கள்?**

சவால்களின்றி எதனையுமே சாதித்து விட முடியாது என நினைக்கின்றேன். நேரம் தான் முதல் தடையாக உள்ளது. பாடசாலை தொழில் நேரத்திற்குப் பின்னர் பிரதேசங்களுக்குச் சென்று எனது கடமைகளைச் செய்கிறேன் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் போது விடுமுறைகளை எடுத்துப் பங்குபற்றக்கூடிய சூழலில் தான் நகர்ந்து கொண்டிருக்கின்றேன். குடும்ப உறுப்பினர்களிடையே பல கருத்து முரண்பாடுகள் தோன்றும் இருந்தும் எனது இலக்கு நோக்கிப் பயணிக்கையில் அவை குறித்து நான் பெரிதாக அலட்டிக் கொள்வது கிடையாது.

**கேள்வி: இரண்டு துறைகளிலும் உள்ள சவால்களை எவ்வாறு கடந்து பயணிக்கின்றீர்கள்?**

ஆசிரியர் தொழிலில் இருந்து விலகி முழு நேரமாக அரசியல் செய்வதென்பது பொருளாதார ரீதியில் சாத்தியமற்றது. ஆசிரியர் மற்றும் அரசியல் ஆகிய இரண்டுமே பெரிய பொறுப்புமிக்க துருவங்கள். ஆதலால், இரண்டையும் சமாளிப்பது போர்க்களத்தில் பயணிப்பது போன்றது தான். இருந்தும், பொருளாதார பின்னணி காரணமாக இரண்டு துறைகளையும் சமப்படுத்திச் செயலாற்றுகின்றேன். எனது துணைவியாரின் முழு ஒத்துழைப்பு மூலமாகத்தான் ஓரளவு என்னால் இவ்வளவு சிக்கலுக்கு மத்தியிலும் முடிந்தளவு இரு துறைகளிலும் திருப்திகரமான சேவையினை வழங்க முடிகின்றது.

**கேள்வி: தங்களுடைய அதி உச்ச எதிர்கால இலக்கு என்னவாக இருக்கின்றது?**

இலக்கு எனும்போது எனது தனிப்பட்ட இலக்கு மாத்திரம் அன்று. மாறாக ஒரு குழுவின் இலக்கு நோக்கியே நானும் அணியினரும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எமது நாட்டில் பெரும்பான்மையாக வாழக்கூடிய உழைக்கும் வர்க்கத்தினர் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நிம்மதியற்ற வாழ்க்கையைச் சமாளித்துக் கொண்டிருக்கின்றார்கள். பொருளாதார பின்னடைவு, சுகாதார ஒழுங்கின்மை, வளப் பகிர்வு சமனின்மை, அடிப்படைத் தேவைகளுக்கான பூர்த்தியாதலின்மை, இன ஒடுக்குமுறைகள் என உழைக்கும் வர்க்கத்தினர் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழக்கூடிய சூழல் தான் உள்ளது. அதிகார சக்திகள் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மக்களுடைய வளர்ச்சிப் பாதைக்குத் தடையாக உள்ளனர். இந்நிலைமையில் இருந்து சமூகம் விடுபட வேண்டும் என்பதே எங்களது நோக்கம்.

“ஒரு வர்க்கத்திற்கு ஒரு கட்சி என்று, ஒரு பலமான அமைப்பைக் கட்டி எழுப்புவதன் ஊடாக உழைக்கும் மக்களிடம் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை முன்னெடுப்பதே” எங்களது இலக்கு. இந்த இலக்கை அடையவே நாங்கள் கூட்டாக முயற்சிக்கின்றோம்”




> **உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் முயற்சியில் இயங்கி வரும் எங்களது அமைப்பினை மேலும் பலப்படுத்தி விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை அதிகம் காணப்படுகின்றமையினால் மக்களுக்காக செயலாற்றுவதற்காக அரசியல் துறையில் பயணப்படுவதில் அதிக ஈடுபாடு கொள்கிறேன்**

**கேள்வி: தாங்கள் கூட்டாக முயற்சிக்கின்ற பொழுது எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றீர்கள்?**

அடிப்படையான நிதி பற்றாக்குறை தான் பெரிய பிரச்சினை. சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் போது, குறிப்பிட்ட மக்களிடமிருந்து நிதி கிடைக்கின்றது. அதேவேளை சமூகத்தின் தேவைகளைப் புரிந்து கொண்டு நிதியினை வழங்க வேண்டும் என்ற எண்ணோட்டம் மக்களிடையே போய்ச் சேர்வது சற்று குறைவு. மற்றொரு சவால் ‘ஆளணி திரட்டல்’. சமூக மாற்றத்தை விரும்பக் கூடியவர்கள் சார்பளவில் குறைவு. மேல்நிலையில் இருப்பவர்களுக்கும் கீழ் நிலையில் இருப்பவர்களுக்கும் இடையிலே இடம்பெறுகின்ற இந்த போராட்ட களங்களின் போது அடக்குமுறைகளையும், தடுப்புகளையும் தவிர்க்க முடியாதல்லவா. இருப்பினும் நாம் இவ்வாறான பிரச்சினைகளை சந்தோஷமாக எதிர்கொள்ள தலைப்படுகின்றோம்.

**கேள்வி: மலையக மக்களுக்காக உங்களுடைய அமைப்பு சார்ந்து முன்னெடுத்த நடவடிக்கைகள் பற்றி கூறமுடியுமா?**

இலங்கை நாட்டில் மலையக மக்களை ஒரு சட்ட ரீதியான தேசிய இனமாக அடையாளப்படுத்தியதில் எங்களது அணிக்கும் பங்கு இருக்கின்றது என்பதில் திருப்தியடைகின்றோம். தோட்டத் தொழிலாளர்களது சம்பள பிரச்சினை மற்றும் நில உடைமையற்ற சமூகமாக மலையக மக்கள் இருப்பதனால் அது தொடர்பாக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தல். அரசியல் விழிப்புணர்வு கூட்டங்களைத் தொடர்ந்து நடாத்துகின்றமை. காணி வீட்டுரிமை குறித்து விழிப்புணர்வு மற்றும் போராட்டங்கள் நடத்தியமை. இருந்தும் இதுவரை நாம் வெற்றி கொள்ளவில்லை. தொடர்ந்தும் மக்களுக்காகப் போராடுவோம் என்பதில் எந்த பின்னடைவும் இருக்காது.

“அடிப்படை சமூக மாற்றத்தை கட்டி எழுப்புவதே முதன்மை சேவை”

**கேள்வி: தாங்கள் கூட்டாக அணி திரளும் பொழுது மக்களது பங்களிப்பு எந்தளவிற்கு வாய்ப்பாக உள்ளது?**

மக்களது பங்களிப்பு என்பது சற்று குறைவு தான். மலையக மக்கள் இன்றுவரை பொருளாதார ரீதியாக ஸ்தீரனமான கட்டமைப்பிற்குள் வளராத நிலையில், அவர்களால் நிதியுதவி வழங்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை. மற்றும் தற்போதைய நவதாராள கட்டமைப்பு மூளைச்சலவைக்கு உட்பட்ட சமூகத்தையே உருவாக்கியுள்ளது. மாற்றம் நோக்கிப் பயணிக்கக்கூடிய முற்போக்கானவர்கள் பலரது ஒத்துழைப்பின் கீழ் முடிந்தளவு கூட்டு முயற்சிகளை முன்னெடுக்க முடியுமாக இருக்கின்றது. இருப்பினும் மாற்றத்தை விரும்பாதவர்களாக மக்கள் இருப்பதனால் என்னவோ மக்களது பங்களிப்பு முழுமையாக கிடைக்காத துர்பாக்கிய நிலையுள்ளது.

**கேள்வி: உங்களுடைய எதிர்கால நடைமுறைகள் பற்றி பகிர முடியுமா?**

உழைக்கும் மக்களுக்கான விடுதலையைப் பெற்று சமூக மாற்றத்தை உருவாக்குவதை நோக்கமாக முன்னெடுத்துச் செயற்படும் எங்களைப் போன்ற சிந்தனையில் உள்ள சிதறிக் கிடக்கும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு திடமான பரந்த அணியை உருவாக்குவதே எதிர்கால நடைமுறையாக உள்ளது. இதன் முதற்கட்ட நடைமுறையாக “மக்கள் போராட்ட முன்னணி” என்ற பொது கூட்டணி ஒன்றினை உருவாக்கியுள்ளோம். தேர்தல் காலங்கள், மக்களுக்கு எதிரான சட்ட நடைமுறைகள், தனியார்மயமாக்கம், சம்பளப் பிரச்சினை போன்ற சந்தர்ப்பங்களில் இந்த முன்னணியானது களமாடும்.

**கேள்வி: சமூகத்திற்கு நீங்கள் கூற விரும்பும் கருத்து என்ன?**

உண்மையிலே காலத்திற்குப் பொருத்தமான கேள்வி. எமது நாட்டினுடைய கல்வி மாணவர்களைத் தொழில் நோக்கி வழிகாட்டுவதாகவே அமைந்துள்ளது. அதுமாத்திரமன்றி, மாணவர்களையும் சமூகத்தினரையும் சமூகத்தில் வாழ்வதற்கு ஏற்ற முற்போக்கு சிந்தனையுடன் செயலாற்றுக்கூடியவர்களாக உருவாக்குவதில் கரிசனை கொள்ளவில்லை. நவதாராள சமூகத்தின் இயல்பு இது. மாணவர்களை வெறுமனே புத்தகக் கல்வியை கற்பவர்களாக மாத்திரமன்றி, சமூகப் பிராணிகளாக உருவாக்குவதே எனது எதிர்பார்ப்பு. மக்கள் சமூகத்தில் இடம்பெறக்கூடிய அநீதிகளைக் குரல் எழுப்பாதவர்களாக அலட்சியப்படுத்துபவர்களாக அல்லாமல், தங்களது பிரச்சினைகள் குறித்து தாமே குரல் எழுப்பக்கூடிய நபர்களாக இருக்க வேண்டும் என்பதன் தேவைப்பாடுகள் நிரம்பியுள்ளன.

“போலியான வாழ்க்கையிலிருந்தும் ஆதிக்க சக்திகளிடமிருந்தும் விடுபட்டு அடித்தட்டு மக்களிடம் அதிகாரத்தை வழங்கி தரமான வாழ்க்கை முறையை உருவாக்குவதே காலத்தின் தேவைப்பாடாக உள்ளது.”

# ‘ஜன கண மன’



சுப்ரமணியம் காயத்திரி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

“தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் எனினும் வாய்மையே வெல்லும்” என்பதனை அடிப்படையாகக் கொண்டு பார்வையாளர்கள் மத்தியில் சுவாரஸ்யத்தினையும், தூண்டுதலையும் ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டதே ‘ஜன கண மன’ திரைப்படமாகும். தமது அரசியல் செயற்பாடுகளுக்காக நாட்டு மக்களையும், சட்டத்தையும் பயன்படுத்துகின்ற அரசியல்வாதிகளின் விளையாட்டு, அதற்காக உயிர்ப்பலி செய்யப்படுகின்ற அப்பாவிப் பெண்கள்,எதிர்த்துக் குரல் கொடுப்பவர்களை அடக்கி விடும் தன்மை போன்று இந்தியாவில் இடம்பெறுகின்ற பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஜன கண மன திரைப்படம் இயற்றப்பட்டுள்ளது. இத் திரைப்படம் டிஜோ ஜோன் ஆண்டனி இயக்கத்தில் 2022ஆம் ஆண்டு மலையாள மொழியில் வெளிவந்துள்ளது. ஜன கண மன என்பது இந்திய நாட்டின் தேசிய கீதத்தின் முதல் வரியாகும்.அதனையே திரைப்படத்திற்கான பெயராகத் திரைப்பட தயாரிப்புக் குழுவினர் தெரிவும் செய்துள்ளனர்.

பிரித்விராஜ் , மம்தா மோகன்தாஸ், சூரஜ் வெஞ்சரமூடு போன்றோர் பிரதான கதாபாத்திரங்களாகவும், துணைக் கதாபாத்திரங்களில் ஷம்பி திலகன், ஜி.எம். சுந்தர், இளவரசு சிறி. திவ்யா போன்றோர் நடித்துள்ளனர். திரைப்படத்தின் கதையின் சுருக்கமானது, . இந்தியாவின் கர்நாடகாவில் மத்தியப் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராகக் கடமையாற்றி வந்த சபா மர்யம் என்ற பெண் கொலை செய்யப்படுகின்றார். தமது பேராசிரியரின் கொலைக்கு நியாயம் கோரி, பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தினை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் காவல் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர்.குறித்த விடயம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக ஏ.சி.பி. சஞ்சன்குமார் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்படுகின்றது. குறித்த குழுவினால் விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டதா?, பேராசிரியர் ஏன் கொலை செய்யப்பட்டார்? , இச் சம்பவத்திற்குப் பின்னால் காணப்படும் அரசியல் பின்புலம் என்ன? போன்ற வினாக்களுக்கு விடைகள் தேடுகின்ற கோணத்திலேயே திரைப்படத்தின் கதை இறுதி வரை நகர்ந்துள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியராகத் தனது நடிப்பினை வெளிப்படுத்தியிருந்த மம்தா மோகன்தாஸ், படத்தின் சில காட்சிகளில் மாத்திரம் வந்திருந்தாலும், முக்கியமான நிகழ்வுகளின் பின்னால் மறைந்திருக்கின்ற உண்மைகளை வெளிப்படையாகக் கண்டறிபவராகவும், மாணவர்களைப் பல விடயங்களில் முன்னின்று வழிநடத்துவதிலும் நீதிக்கான போராட்டங்கள் பலவற்றிற்குத் துணையாக நிற்பவராகவும், ரசிகர்களைக் கவரக்கூடிய வகையில் தனது நடிப்பினை வெளிப்படுத்தியுள்ளார். பொலிஸ் அதிகாரியாக அறிமுகமாகிய சூரஜ் வெஞ்சரமூடு திரைப்படத்தின் முதற் கட்டத்தின் அரைவாசிக் கதையினை தனது நடிப்பின் மூலம் சிறப்பாகக் கடத்தியிருப்பார். எவ்வித உணர்ச்சிகளையும் இலகுவில் வெளிப்படுத்தாத முகம், தனது மகனுக்கு அன்பான தந்தையாகவும், சிறந்த காவலராகவும், படத்தின் ஒரு கட்டத்தில் தன்னால் செய்யப்பட்ட குற்றத்தினை எண்ணிக் கூனிக் குறுகி நிற்கின்ற சந்தர்ப்பத்தில் படிப்பினையாக உச்சக்கட்டத்தினையே சூரஜ் அடைந்து விட்டார்.

திரைப்படத்தின் இரண்டாம் கட்டத்தில் வழக்கறிஞராக அறிமுகமாகிய பிரித்விராஜ் நீதிமன்றத்தில் சத்தமும் கோபமும் என தனது உணர்ச்சிகள் பொங்கி வழிந்திடும் வண்ணம் நடிப்பினை வெளிப்படுத்தியிருந்தார். அரசியல் ரீதியான குறியீட்டுக் காட்சிகளும் வெளிப்படையாக அணுகப்பட்டுள்ளன.




> **திரைப்படத்தின் மையக் கதை நிறைவடைந்த பின்னரும் சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நீதியினைக் கோர முயல்வது படத்தின் மீதான ஆர்வத்தினை குறைக்கச் செய்கின்றது.**

அத்துடன், நீதிமன்றத்தில் பிரித்விராஜ் ஜனநாயகத்தினை நோக்கி எழுப்புகின்ற வினாக்கள் திரைப்படத்தின் மீதான ஆர்வத்தினை அதிகரித்துள்ளன. கண்ணால் பார்ப்பதும் பொய் காதுகளினால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பது மெய் என்பதற்கிணங்க, பேராசிரியர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு எரித்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தினை நேரில் பார்த்த சாட்சிகளை விசாரணை செய்கின்ற காட்சியின் போது, சாட்சியாக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த நபர் அளித்த சாட்சிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான வகையாகக் காணப்பட்டன. இதனால், கண்ணால் காண்பதும் பொய்யாக மாற்றமடையக் கூடும் என்பது தெளிவாக்கப்படுகின்றது. சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் பொய்யான செய்திகளின் முடிச்சுக்களைக் கட்டுடைத்துப் பார்க்கின்ற பொழுது, காதுகளினால் கேட்பதும் பொய் என்பதனை பிரித்விராஜ் தனது நடிப்பின் மூலம் சிறப்பாக நிரூபித்துக் காட்டியிருப்பார்.

மனிதன் ஒரு சூழ்நிலைக் கைதி, சூழ்நிலைகளே மனிதர்களை நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் பரிமாணப்படுத்துகின்றது.. எனினும், ஜன கண மன திரைப்படமானது சூழ்நிலைக் கைதியாக மாறினாலும் தமது மனசாட்சிக்குப் பயந்துதான் வாழ வேண்டும், தவறு செய்தால் நிம்மதியான உறக்கம் கூட வராது என்பதனை அழகாகப் புரிய வைக்கின்றது. அத்துடன் ஒரு செய்தி மக்களைச் சென்றடைவதில் அதன் பெறுமதி எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதற்குச் சான்றாதாரமாக பிரித்விராஜின் மற்றுமொரு கேள்வி சிந்திக்க வைக்கின்றது. பேராசிரியரின் பாலியல் பலாத்காரம் செய்தி முதற்பக்கத்திலும், சிறுமியின் பலாத்கார வன்கொடுமைச் செய்தி ஏழாம் பக்கத்தில் ஒரு சிறு பெட்டிச் செய்தியாக இடம்பெறுவதிலும், சமூக ஊடகங்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் வழங்குகின்றன என்பதேயாகும். சமூக ஊடகங்களின் வழி செய்திகள் பரவலடையும் விதம் பற்றிய புரிந்துணர்வினையும் பார்வையாளர்களின் மத்தியில் ஏற்படுத்துகின்றது.

திரைப்படத்தின் பல நிறைகளுக்கு மத்தியில் சில குறைகளும் காணப்படுகின்றன. திரைப்படத்தின் ஆரம்பக்கட்டத்தில் பிரித்விராஜ்ஜின் நடிப்பானது சற்று தெளிவின்மையாகக் காணப்பட்டது. அத்துடன், திரைப்படத்தின் மையக் கதை நிறைவடைந்த பின்னரும் சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நீதியினைக் கோர முயல்வது படத்தின் மீதான ஆர்வத்தினை குறைக்கச் செய்கின்றது. எனினும், சமூக சிந்தனைக்கு தூண்டுதலளித்து ஜன கண மன திரைப்படம் முற்றுப் பெறுகின்றது.



# அவளிடம் தானே ஆசி பெற வேண்டும்

தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

நயினா தீவா, என்று நினைத்தாலே நேத்திக்கடனும் அர்ச்சனையும் அபிஷேகமும் மட்டும்தானா? ஏன் அந்த தீவில் ஆன்மீகத்தை விட அனுபவிக்க ஒன்றுமே இல்லையா? இறுதியில் உங்களுக்கே புரியும். பிறகு நாளைக்கே நயினா தீவு சென்று பார்வையிட ஓடி விடுவீர்கள்.

சரி அப்படி என்னதான் இருக்கிறது தீவில்? நானும் இப்படித்தான் உங்களைப் போல ஒன்றும் அறியாதவளாய் தீவுக்குச் சென்றேன். இப்படி நான் கதைக்க காரணம் ஒரு முன் ஏற்பாடும் இல்லாமல் சென்ற வாரம் நானும் நயினா தீவு சென்று யாரும் அறியாததையும் தெரியாததையும் பார்த்ததால் மட்டும் தான். கட்டாயம் என் அனுபவத்தைச் சொல்ல வேண்டும் அல்லவா, அவ்வளவுக்கு நான் ஒன்றும் சுயநலவாதி இல்லையே.

தீவு பயணம் என்ற மகிழ்ச்சியை விட என் சகாக்களோடு சென்றேன் என்பதுதான் இன்னும் மகிழ்ச்சி. சரி கதைக்கு வருவோம். கடந்த திங்கட்கிழமை நானும் எனது நண்பர்களும் நயினாதீவு செல்வதாக முடிவு எடுத்து விடியற்காலை 6 மணிக்கு குறிகட்டுவன் பேருந்தில் செல்ல தயாரானோம். "எந்த நண்பன் தான் சொன்ன நேரத்துக்கு வருவான்" என்ற கதை மெய்த்து விட்டது. அன்றும் இப்படித்தான் நடந்தது. எல்லோரும் வந்து சேர காலை 6.30 மணி ஆகிவிட்டது. சரியாகக் காலை 7.00 மணிக்கு குறிக்கட்டுவன் செல்லும் பேருந்தில் யாழ்ப்பாண பேருந்து நிலையத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கிப் புறப்பட்டோம். அரை மணித்தியால பயணம் என்றார்களே! அட இல்லையா! என்று குறிக்கட்டுவானில் இறங்கியவுடன் தான் தெரிந்தது. சற்று தாமதமாகத் தான் பேருந்து சென்றடைந்தது. வழமையான நாட்களை விட மக்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. தீவுக்கு செல்லும் கூட்டத்தில் நயினா தீவு கோயிலுக்கும் நாக விகாரைக்கும் செல்லும் கூட்டமே அதிகம். இதற்கிடையில் என் மனதில் ஒரு யோசனை வந்தது. எல்லோரும் நயினையம்மன் கோயில் அன்னதானம் பிரமாதம் என்றார்கள். அது எப்படி இருக்கும்? என்பதுதான் அந்த யோசனை. இதனை எல்லாம் யோசித்துக் கொண்டே நாங்களும் ஒரு படகில் ஏறினோம். படகில் ஏற சற்று முன்பு கூட எங்களுக்குள் ஒரு சிறிய சலசலப்பு தான். காரணம் யாருக்கு புதிய பாதுகாப்பு மேலணி கவசம் கிடைக்கும் என்பதுதான். அதிலும் போட்டி போட்டு ஆளுக்கு ஆள் ஒன்றை எடுத்து போட்டுக் கொண்டு படகில் ஏறினோம். எத்தனையோ நாட்கள் குளத்தில் படகு பயணம் சென்றுள்ளேன். ஆனால், முதன்முறையாக கடலில் படகு பயணம் செல்வது என்பது எனக்கு மிகவும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. "எள்ளளவும் பயமில்லை" என பொய் சொல்ல மாட்டேன். தீவு பயணம் முடிவு வரை ஒரு பயம் மனதோரத்தில் சற்று தத்தளித்து கொண்டேதான் இருந்தது. படகு கடலில் ஏறி இறங்கி தவழ்ந்து தவழ்ந்து சென்றதும் அதற்கு ஏற்றாற் போல படகில் ஒலித்த பாடலும் அந்த சூழலையே அழகாக்கி விட்டது. என்னவோ தீவுக்கு வந்து சேர்ந்து விட்டோம். என்னதான் நாங்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வந்தாலும், கூட நாங்கள் இறங்கியது என்னவோ நயினையம்மன் பாதத்தில் தான். தமிழர்களாகிய நாம் முதலில் ஆசி பெற வேண்டியது அவளிடம் தானே.

தீவுக்கு முதல் பயணம் என்பதால் நண்பர்களுடன் சில புகைப்படம் எடுத்துக்கொண்டேன். சட்டென திரும்பி பார்த்தால் வானமே தலை சாய்க்கும் கோபுர அழகும், செதுக்கள் சிற்பமும், ஆலய அமைப்பும் கண்ணை கௌவிக் கொள்ளும் வர்ணங்களும் என்னை ஒரு சில நிமிடங்கள் வியப்பில் ஆழ்த்திவிட்டன. கோயிலின் அழகுக்கு கடற்கரை சூழல்



மிக ரம்யமான அழகைத் தந்தது. கோயில் முன்றலில் இருக்கும் சிறு கடைகளில் இனிப்புகள் வாங்கி உண்பது என்பது எத்தனை வயது கடந்தாலும் மாறாத பழக்கமே.

இறைவழிபாட்டின் பிறகு கோயிலைச் சுற்றிப் பார்த்தோம். அன்னதான வரிசை தயாரானது. உடனே நாங்களும் வரிசையில் நின்றோம். எதிர்பார்த்ததை விடத் தரமானதும் சுவையானதும் தெய்வீகம் கலந்த அருமையான சைவ உணவு. இப்போது நினைத்தாலும் மீண்டும் சாப்பிடத் தூண்டும் அமிர்தம் அது. அதிலும் அவர்கள் உபசரித்த விதமே தனி அழகு தான். சிங்கள தமிழினம் கடந்து மொழி, இன, பேதம் மறந்து எல்லோருக்கும் பாரபட்சம் இன்றி அன்னதானம் வழங்கப்பட்டது.

தினந்தோறும் நயினா தீவு செல்லும் அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது. இதன் பிறகு சாப்பிட்ட களைப்பு போகும் வரை கோயில் முன்றலில் சிறிது நேரம் இளைப்பாறினோம். "உங்களை இளைப்பாற அமர்ந்து விட்டால் இருந்த இடத்தை விட்டு எழுப்புவது கஷ்டமே" என்றாள் எனது நண்பி. அவள் அப்படித்தான், எங்கள் குழுமத்திற்கு அவள் ஒரு சிறந்த சுற்றுலா வழிகாட்டி. அதன் பிறகு நாங்கள் மெது மெதுவாக நடந்து சென்றோம். சிற்றுண்டிச் சாலைகளையும் பார்த்த வண்ணம் நாக விகாரைக்கு சென்றோம். விகாரையின் முகப்பில் தொடங்கி உள் பக்கம் வரை மிக ஆத்மார்த்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

மக்கள் கூட்டத்திற்கு இங்கேயும் குறைவில்லை. அதிலும் விகாரையின் முன் உள்ள கடலும் அதற்கேற்ற மரங்களும் இன்னும் அழகை அள்ளித் தந்தன. நாங்கள் அங்கிருந்து சிறிது நேரத்தில் புறப்பட்டு விட்டோம். காரணம் நேரம் எங்களை விட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நாங்கள் நாக விகாரைக்கும் பிறகு சென்ற இடத்தினை நிச்சயமாக ஒரு சுற்றுலாத்தலமாக ஊக்குவித்தால், இன்னும் 50 வருடங்களில் மாலை தீவினை போல ஒரு சிறந்த சுற்றுலாத்தளமாக வர வாய்ப்புண்டு. அந்த அளவுக்கு மனதை ஈர்க்கும் அந்தக் கடற்கரை காட்சி இன்னும் என் கண்களிலேயே உள்ளது. நைனாதீவின் தேசிய நீர் வளங்கள் திணைக்களத்துக்கு அருகாமையிலேயே இந்த கடற்கரை காணப்படுகின்றது. நாங்கள் அரச பேருந்திலேயே அந்த இடத்திற்குச் சென்றோம். நாக பூசணி அம்மன் கோயில் முன்றலில் பேருந்து புறப்பட்டு அங்கே சென்றடைந்தோம். அங்கே சென்றது எங்களுக்கு இன்னும் மகிழ்ச்சி.


எங்களைச் சுற்றி கடலும், கடற்கரையும், கூடவே கட்டி இருந்த ஒரு பழைய படகு ஒன்று மட்டும்தான். நாங்கள் அந்த படகில் ஏறி விளையாடினோம். சில நண்பர்கள் கடற்கரையில் நின்று புகைப்படம் எடுத்தனர். படகில் இருந்த நாங்கள் அனைவரும் சேர்ந்து படகை ஆட்டினோம். ஒரு கட்டத்துக்கு மேல் படகு கவிழ்ந்து வீழ்ந்து எல்லோரும் நனைந்து விட்டோம். குதூகலத்தில் ஆடைகள் நனைந்தது கூட அங்குப் பெரிய விடயமாகத் தெரியவில்லை. எல்லோர் மனதிலும் கவலைகள் மலர்ந்த மன நிம்மதி அங்கே கிடைத்தது. நாங்கள் அந்த கடற்கரையில் எதிர்பார்த்தது அதனைச் சுற்றுலாவிற்குரிய தளமாக மாற்றினால் தீவின் தனித்துவமே மாறிவிடும் என்பதுதான். இதனைக் கதைத்தபடியே மறுபடி நாங்கள் பேருந்தில் ஏறி கோயிலின் முன்றலில் வந்திறங்கினோம். வந்த உடனேயே நாங்கள் படகில் புறப்படத் தயாரானோம். வீட்டுக்குச் செல்ல மனம் இல்லாதவர்களாக. ஏதோ ஒரு சலிப்புடன்

படகில் எங்கள் கவலையைத் தீர்க்க ஏற்றாற் போல, பாடல் ஒலித்தது. அதனைக் கேட்டபடியே வந்து சேர்ந்தோம். குறிகாட்டுவானிலிருந்து மறுபடியும் பேருந்து யாழ். நகரை நோக்கிப் புறப்பட்டது. சுற்றும் போது, வெயிலின் அருமை தெரியவில்லை. எல்லோருக்கும் களைப்பு முகத்தில் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

யாழ் நகரை அடையும்போது மாலை 6.00 மணி ஆகிவிட்டது. உண்மையில் 12 மணி நேரப் பயணம் என்பதை விட அந்த குறுகிய நேரச் சுற்றுப்பயணம் என் மனதில் இருக்கும் எண்ணற்ற கவலைகளை மறக்க வைத்துவிட்டது. என் மனதில் பதிய வைத்த அனுபவப் பயணமாகவே இதனை எண்ணத் தோன்றுகிறது.

பயணங்கள் கொடுக்கும் அனுபவங்கள், அதி அற்புதமானவை. பேருந்தில் ஜன்னலோர இருக்கை, இசைஞானியின் பாடல், மெல்லிய சாரல், மண்வாசனை அனைத்தும் ஒருசேர வாய்ப்பது வரம். உடல் நோய் முதல் உளநோய் வரை குணப்படுத்தும் சக்தி பயணங்களுக்கு உண்டு. நீண்ட நெடுந்தூரப் பயணமோ, அருகாமையில் இருக்கும் இடமோ. எதுவாக இருந்தாலும், வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பயணம் போகத் தவறாதீர்கள். அது உங்கள் வழக்கமான வாழ்க்கையின் அழுத்தங்களிலிருந்து விடுதலை அளித்து, மனதுக்கும் உடலுக்கும் நிச்சயம் புத்துணர்வைத் தரும்.






## டைட்டானிக் திரைப்படம்

# கதையல்ல காதல் காவியம்

ரா.மனோஜ்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

உலக சினிமா வரலாற்றில் இன்னும் எத்தனை கதைகள் திரைப்படமாக வெளிவந்தாலும் டைட்டானிக் திரைப்படம் பார்த்த பின்னர் எமக்குள் எழும் ஒரு இனம்புரியாத உணர்ச்சி ஒரு காலமும் குறையாது ஏனென்றால் அது கதையல்ல காதல் காவியம் என்றே கூறவேண்டும்.

1997ஆம் ஆண்டில் வெளிவந்த 'டைட்டானிக்' திரைப்படம் இயக்குநர் ஜேம் கெமெரூன் உருவாக்கிய புகழ்பெற்ற மற்றும் வரலாற்றில் முக்கியமான திரைப்படங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இந்த திரைப்படம் 1912 இல் நடந்த டைட்டானிக் கப்பலின் சரிவையும் அதில் உள்ள காதலர்கள் ஜாக் மற்றும் ரோஸ் என்பவர்களின் கதைப் பின்னணியையும் கொண்டுள்ளது.

'டைட்டானிக்' திரைப்படத்தின் கதையைப் பேசும் போது முதலில் அதன் மையக் கதாபாத்திரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வது முக்கியம். ஜாக் டோஸ்டன் (லியோனார்டோ டிகாபிரியோ) ஒரு ஆட்டோவாக் சித்திரக்காரன். ரோஸ் வெவிடிடிடிட் (கேட்ரின் ஜேட்ட்ஸ்) ஒரு உயர்ந்த சமூகத்துப் பெண். இருவரும் டைட்டானிக் கப்பலில் சந்திக்கின்றனர். மேலும் அவர்களது காதல் முழுமையாக வேறுபட்ட சமூகச் சிக்கல்களை வெல்லும் விதமாக அழகாக வளர்ந்து வருகிறது.

திரைப்படம் அதன் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப சாதனைகளைப் போலவே காட்சிகள் மூலம் பார்வையாளர்களின் மனதில் சிறப்பு இடத்தை பிடித்துள்ளது. கப்பலின் அலங்காரம் மற்றும் அதன் மாபெரும் அளவு 1910 களின் உண்மையான புகைப்படங்களைப் போலவே புனைவாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஹன் சிம்மர் என்பவரால் அமைக்கப்பட்ட இசை திரைப்படத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். *'my heart will go on'* என்ற பாடல் திரைப்படத்தின் சின்னமாக மாறியிருக்கிறது. இது காதலின் துயரத்தை அழுத்தமாக வெளிப்படுத்துவதுடன், கதை மற்றும் காட்சிகளுக்கு ஒரு ஆழமான உணர்வு சேர்க்கிறது.

லியோனார்டோ டிகாபிரியோ மற்றும் கேட்ரின் ஜேட்ட்ஸ் நடிப்பின் மூலம் ஜாக் மற்றும் ரோஸ் கதாபாத்திரங்கள் நம் மனதில் ஒரு அழகான சின்னமாக நிலைத்திருக்கின்றன. அவர்களின் காதல் கதை சமூகத்தால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளைக் கடந்துபோய் மனதில் ஒரு அழகான நினைவுகளை ஏற்படுத்துகிறது. 'டைட்டானிக்' திரைப்படம் காதல் கதை மட்டுமல்லாமல், சமூக விருப்பங்கள், வரலாற்றுப் பொருளாதாரம் மற்றும் மனிதர்களின் வாழ்வியல் முறைகள் ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிறது. கப்பலின் செல்வந்தர்கள் மற்றும் தொழிலாளர்கள் இடையேயான தர்க்கம் அதில் நிலவும் சமூக வர்க்கங்களின் இடைவெளிகளை உருவாக்குகிறது.

திரைப்படத்தில் உள்ள உணர்வுகள் மிக ஆழமானவையாகும். டைட்டானிக் கப்பல் ஆழத்தில் வீழ்ந்த போது ஜாக் மற்றும் ரோசின் இடையே உள்ள காதல் கதை அதில் உள்ள அழகிய தருணங்களை பரிசுப்படுத்துகிறது. 'டைட்டானிக்' திரைப்படம் அதன் பிரமாண்டமான காட்சிகள் இசை மற்றும் சீரான கதாபாத்திரங்களின் ஆழத்துடன் இந்த திரைப்படம் காதலின் அவசரத்தைக் காட்டுவதோடு, மனிதர்களின் தழுவல் மற்றும் மனித நேயத்தைப் பற்றிய ஒரு பாடமாகவும் பார்க்கப்படுகிறது.

மொத்தத்தில் 'டைட்டானிக்' என்பது பார்வையாளர்களின் மனதில் ஒரு மறக்க முடியாத அனுபவமாக மாறுகிறது. காதலின் துயரமும் வாழ்க்கையின் முழுமையும் வரலாற்றின் நெடிய சதிகளும் இதில் உள்ளன. 'டைட்டானிக்' என்பது உண்மையிலேயே ஒரு காலத்திற்கேற்ற காதல் கதையாகவே பார்க்கப்படுகிறது.

இந்த திரைப்படத்தைப் பார்த்த பிறகு உங்கள் உள்ளத்தின் ஆழத்தை மீட்டுப் பார்க்கவும் காதலின் நிலைமைகளை புது பார்வையால் அலசவும் இது உதவுமென்று நம்புகிறேன்.



கனடா


ட்ரூடோவுக்கு எதிராக சொந்த கட்சி எம்.பிக்கள்

# போர் கொடி

கனடாவில் வசித்த காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை சம்பவத்தால், இந்தியாவுக்கு கனடாவுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிராக சொந்த கட்சி எம்.பிக்கள் 24 பேர் போர் கொடி தூக்கியுள்ளனர்.

இடைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியை சந்தித்தது. மேலும் கருத்துக் கணிப்புகளில் ஆளும் கட்சியின் செல்வாக்கு சரிந்து இருப்பது தெரியவந்தது.

அடுத்த தேர்தலில் ஜஸ்டின் தலைமையிலான லிபரல் கட்சி மோசமாக தோற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜஸ்டின் மீது எம்.பி.க்கள் சிலர் அதிருப்தி அடைந்து,



அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தும் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்த கடிதத்தில், பிரதமர் பதவியை ஜஸ்டின் இராஜினாமா செய்ய வேண்டும். அத்துடன், 4ஆவது முறையாக தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று தெரிவித்துள்ளனர்.

இதன்படி, 28ஆம் திகதி வரை காலக்கெடு விதித்துள்ளனர். இல்லையேல், குறிப்பிடப்படாத விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும்" எனவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே லிபரல் கட்சி எம்.பிக்களை ஜஸ்டின் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இக்கூட்டம் 3 மணி நேரம் நடைபெற்றது.

அப்போது, ஜஸ்டின் பதவி விலக வலியுறுத்தும் கடிதம் வாசிக்கப்பட்டது. இந்த கூட்டம் முடிந்த பிறகு ஜஸ்டின் கூறும்போது, லிபரல் கட்சி வலுவாகவும், ஒற்றுமையாகவும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.



பங்களாதேஷ்

ஷேக் ஹசீனா கட்சியின்

## மாணவர் பிரிவுக்கு தடை

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ், ஷேக் ஹசீனா கட்சியின் மாணவர் பிரிவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தியதால், தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்து விட்டு, இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இதனால் பங்களாதேஷில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால அரசு அமைந்ததும் ஷேக் ஹசீனாவுக்கு எதிராகவும், அவரது கட்சிக்கு எதிராகவும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ், ஷேக் ஹசீனா கட்சியின் மாணவர் பிரிவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற போராட்டத்தின்போது, வன்முறை தாக்குதலில் மாணவர் பிரிவு ஈடுபட்டதாலேயே, இந்த மாணவர் பிரிவுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளதாக, இடைக்கால அரசு தெரிவித்தள்ளது.

லெபனான்

ஒரே இரவில்

## 17 தாக்குதல்கள்; ஐவர் படுகாயம்

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதிகளில் ஒரே இரவில், இஸ்ரேல் குறைந்தது 17 தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இதில், ஒருவர் உயிரிழந்ததுடன், ஐந்து பேர் படுகாயமடைந்ததாக, லெபனானின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், இஸ்ரேலின் தாக்குதலால் பெய்ரூட்டின்



தெற்கு புறநகர் பகுதியான லைலாக்கியில் ஆறு கட்டிடங்கள் தரைமட்டமாகின.

துருக்கி

விண்வெளி ஆய்வு மையத்தின் மீது தாக்குதல்:

## ஐவர் பலி; 22 பேர் படுகாயம்

துருக்கி தலைநகர் அங்காராவில் விண்வெளி ஆய்வு மையத்தின் தலைமைய கமான TUSAS மீது, புதன்கிழமை (23) துப்பாக்கி சூடு, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததுடன், 22 பேர் காயமடைந்தனர். பதில் தாக்குதலில் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர், அவர்களில் பெண் ஒருவர் அடங்குவதாக, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இறந்தவர்களில் நான்கு பேர் TUSAS ஊழியர்கள் ஆவர்.

இந்த தாக்குதலை குர்தீஷ் பிரிவினைவாதிகள் அல்லது ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்தி இருக்கலாம் என்ற சந்தேகிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக, துருக்கி ஜனாதிபதி எர்டோகன் ரஷ்யா சென்றுள்ள நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெங்களூரு

6 மாடி கட்டிடம் இடிந்து வீழ்ந்ததில்

## 8 தொழிலாளிகள் உயிரிழப்பு

கர்நாடகா - பெங்களூருவில், 6 மாடி கட்டிடம் இடிந்து வீழ்ந்ததில் 8 தொழிலாளிகள் உயிரிழந்துள்ளதுடன், 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பெங்களூரு - ஹெண்ணூர், பாபுசாப் பாளையா பகுதியில் புதிதாக 6 மாடி கட்டிட நிர்மாண பணி நடந்து வந்தது. இதில் 24 வட மாநில தொழிலாளிகள் பணியாற்றி வந்துள்ளனர்.

பெங்களூருவில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர்ந்து அடைமழை பெய்து வருகின்ற நிலையில், செவ்வாய்க்கிழமை(22) பகல் 3 மணியளவில், அந்த கட்டிடம் திடீரென இடிந்து விழுந்துள்ளது.

இதில் கட்டிடத்திற்குள் வேலை பார்த்த வடமாநில தொழிலாளிகள் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

தகவலறிந்து சம்பவ



இடத்துக்கு விரைந்த ஹெண்ணூர் பொலிஸார், மீட்பு படையினர் பொக்லைன் எந்திரம் உதவியுடன் அங்கு மீட்பு பணிகளை தொடங்கினர். இதன்போது, விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து, கட்டிட உரிமையாளர், அவரது மகன், ஒப்பந்ததாரர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பெங்களூரு கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, அவர்களது குடும்பத்துக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

பணத்தை மிச்சப்படுத்துவதற்காக கட்டுமானப் பொருள்களின் தரத்தை புறக்கணித்த கட்டிட உரிமையாளர்கள், ஒப்பந்ததாரர் மற்றும் கொத்தனார் ஆகியோர் தரமற்ற கட்டுமானப் பொருள்களைப் பயன்படுத்தி இந்த கட்ட நிர்மாண பணிகளை முன்னெடுத்தாக, விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கட்டிட உரிமையாளர்கள், பொறியாளர், கொத்தனார் ஆகியோர் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதும் செய்யாதது அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெறாததுதான் இந்தச் சம்பவத்திற்கு வழிவகுத்தது.

ஒடிசா

நகர்ந்து வரும்

## 'டானா' தீவிரமடைந்து

இந்தியாவின் கிழக்கு மத்திய மற்றும் அதையொட்டிய மேற்கு மத்திய வங்கக் கடலில் வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கி நகர்ந்து வரும் டானா புயல், தற்போது தீவிர புயலாக வலுப்பெற்றுள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த புயல் வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து வடக்கு ஒடிசா- மேற்கு வங்கம் கடற்பகுதியில் ஒடிசாவின்



பிட்டார்கனிகா மற்றும் தமரா பகுதியை ஒட்டிய பூரி- சாகர் தீவு இடையே கரையை கடக்கும்.

இதன்போது, 100 முதல் 110 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இந்த தீவிர புயல் காரணமாக மேற்கு வங்கம் மற்றும் ஒடிசாவில் அதிகனமழை பெய்யும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதனால் மேற்கு வங்கத்திலும் ஒடிசாவிலும் விமான சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும், சுமார் 190 உள்ளூர் ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற இலங்கை, பல்லேகலவில் புதன்கிழமை (23) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

மழை காரணமாக இனிங்ஸொன்றுக்கு 44 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் சரித் அசலங்க தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், மகேஷ் தீக்‌ஷன (3), அசித பெர்ணாண்டோ (2), வனிது ஹசரங்கவிடம்(3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து ஒரு கட்டத்தில் 15.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்களையே பெற்றுத் தடுமாறியது.

பின்னர் ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் 80 (82), குடகேஷ் மோட்டியின் ஆட்டமிழக்காத 50 (61) ஓட்டங்களுடன் 36 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. இறுதி 2 விக்கெட்டுகளையும் அசித, ஹசரங்க ஆகியோர் கைப்பற்றினர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரம்பத்திலேயே அல்ஸாரி ஜோசப், மோட்டியிடம் அவிஷ்க பெர்ணாண்டோ, குசல் மென்டிஸை இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தின் பின்



ஜோசப்பிடம் நிஷான் மதுஷ்க 38 (44) வீழ்ந்தார். சிறிது நேரத்தில் றொஸ்டன் சேஸிடம் சதீர சமரவிக்கிரம 38 (50) ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் ஜனித் லியனகே 24 (34) ரண் அவுட்டானபோதும் அணித்தலைவர் சரித் அசலங்கவின் ஆட்டமிழக்காத 62 (61), கமிந்து மென்டிஸின் ஆட்டமிழக்காத 11 (16) ஓட்டங்களோடு 38.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இலங்கை அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக தீக்‌ஷன தெரிவானார்.

முதலாவது டெஸ்டில்

## பங்களாதேஷை வென்ற தென்னாபிரிக்கா

பங்களாதேஷுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மிர்ப்பூரில் திங்கட்கிழமை (21) ஆரம்பித்து வியாழக்கிழமை(24) முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 106/10 (துடுப்பாட்டம்: மஹ்முடுல் ஹஸன் ஜோய் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: வியான் முல்டர் 3/22, ககிஸோ றபாடா 3/26, கேஷவ் மஹராஜ் 3/34, டேன் பீடிட் 1/19)

தென்னாபிரிக்கா: 308/10 (துடுப்பாட்டம்: கைல் வெரைன் 114, வியான் முல்டர் 54, டேன் பீடிட் 32, டொனி டி ஸொர்ஸி 30, றயான் றிக்கெல்டன் 27, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 5/122, ஹஸன் மஹ்மூட் 3/66, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/63)

பங்களாதேஷ்: 307/10 (துடுப்பாட்டம்: மெஹிடி ஹஸன் மிராஸ் 97, ஜாகிர் அலி 58, மஹ்முடுல் ஹஸன் ஜோய் 40, முஷ்பிக்கூர் ரஹீம் 33, நஜ்முல்



ஹொஸைன் ஷன்டோ 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 6/46, கேஷவ் மஹராஜ் 3/105, வியான் முல்டர் 1/40)

தென்னாபிரிக்கா: 106/3 (துடுப்பாட்டம்: டொனி டி ஸொர்ஸி 41, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆ.இ 30, ஏய்டன் மார்க்ரம் 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 3/43)

போட்டியின் நாயகன்: கைல் வெரைன்.

சம்பியன்ஸ் லீக்:

## மியூனிச்சை வீழ்த்திய பார்சிலோனா

### லில்லியிடம் தோற்ற அத்லெட்டிகோ

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (24) நடைபெற்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுடனான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக அணித்தலைவர் றபினீயா மூன்று கோல்களையும், றொபேர்ட் லெவன்டோஸ்கி ஒரு கோலையும் பெற்றதோடு, மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரி கேன் பெற்றார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் இன்னொரு லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் தோற்றது. அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் அல்வரேஸ் பெற்றதோடு, லில்லி சார்பாக ஜொனதன் டேவிட் இரண்டு கோல்களையும், எடொன் ஸெக்ரோவா ஒரு கோலையும் பெற்றனர்.



இந்நிலையில், இன்னொரு புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி. லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் டர்வின் நுனேஸ் பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் வென்றது.



## முகாமையாளர் ஸ்கெவி?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்னாள் முகாமையாளரான ஸ்கெவியுடன் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முகாமையாளராவது குறித்து அக்கழகம் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டின் முகாமையாளர் எரிக் டென் ஹக்கின் கீழ் அவ்வணி மோசமாக செயற்படுகின்ற நிலையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் யுனைட்டெட்டின் முகாமையாளராக பதவியேற்குமிடத்து பார்சிலோனாவின் அணித்தலைவரான றபினீயாவைக் கைச்சாத்திட ஸ்கெவி கோருவாரெனக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 25,பெப்ரவரி 2024, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.